விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 பங்குனி 14 வெள்ளிக்கிழமை (27.03.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 098





# யுத்தம் நிறுத்தப்படும் வரை ஜனாதிபதியை சந்திப்பதில்லை

## தமிழ்க் கூட்டமைப்பு அறிவிப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவில் மோதல்களில் சிக்கியுள்ள மக்களின் மனிதாபிமான அவலங்களைக் கருத்திற் கொண்டு இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தும்வரை ஜனாதிபதியை சந்திப்பதில்லை என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது. (12ஆம் பக்கம் பார்க்க)



## பாதுகாப்பற்ற சூழலில் வன்னியிலுள்ள மக்கள்!

### ஐ.நா. கவலை

(ஜெனீவா)

வன்னியில் இடம்பெயர்ந்து பாதுகாப்பு வலயங்களில் உள்ள பொதுமக்கள், எறிகணை வீச்சுக்கள் மற்றும் உணவு, சுத்தமான நீர் மற்றும் மருந்து பொருட்களின் தட்டுப்பாடுகள் காரணமாக தொடர்ந்தும் பாதுகாப்பற்ற சூழ்நிலையுடன் வாழ்வதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இந்தத் தகவல்களை நேற்று முன்தினம் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் நாளாந்த செய்தியாளர் சந்திப்பின் போது ஐ.நா. பொதுச் (12ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி மக்களைப் பாதுகாக்க சர்வதேச சமூகம் உதவ வேண்டும்

### அமைச்சர் ஹெகலிய அழைப்பு



(கொழும்பு)

யுத்த பிரதேசத்தில் சிக்குண்டுள்ள மக்களைப் பற்றி சர்வதேச சமூகம் பல அழுத்தங்களைக் கொடுத்து வருகிறது. அம்மக்களைப் பாதுகாக்கவும் மீட்கவும் அரசுக்கு ஒத்துழைப்பை வழங்குமாறு நாம் சர்வதேசத்தைக் கேட்டுக் கொள்கிறோம் என பாதுகாப்பு அமைச்சர் ஹெகலிய (12ஆம் பக்கம் பார்க்க)

### முல்லைத்தீவிலிருந்து 485 பேர் புல்மோட்டைக்கு

முல்லைத்தீவு புதுமாத்தளனில் இருந்து நேற்று 485 பேர் கிறீன் ஓசியன் கப்பல் மூலம் புல்மோட்டைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். காலநிலை சீரற்ற தன்மையாகக் காணப்பட்டதால் கப்பல் நீண்ட தாமதத்திற்குப் பின்னரே வந்து சேர்ந்ததாக தெரிவிக்கப்பட்டது. இக்கப்பலில் காயங்களுக்கு இலக்கானோர் நோயாளர்கள், கர்ப்பிணிகள் அடங்கலாக 120 பேர் கொண்டு வரப்பட்டுள்ளனர் என்றும் ஏனையோர் இவர்களது உறவினர்கள் மற்றும் உதவியாளர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-14)

## புதுமாத்தளன் வைத்தியசாலைச் சூழலில் பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள்!

### செஞ்சிலுவைச் சங்கத்திடம் வைத்தியர் வேண்டுகோள்

(முல்லைத்தீவு)

தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்களிற்கு உள்ளாகிவரும் புதுமாத்தளன் மருத்துவமனையின் பாதுகாப்பினை உடனடியாக உறுதிப்படுத்தித்தருமாறு சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் உள்ளிட்டோரிற்கு முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

படையினருக்கும்புலிகளுக்குமிடையிலான மோதல்கள் அதிகரித்த நிலையில் அண்மைய நாட்களாக புதுமாத்தளன் மருத்துவமனை பிரதேசத்தில் தொடர்ச்சியாக ஷெல்கள் வீழ்வதை அடுத்தே (12ஆம் பக்கம் பார்க்க)

## வர்த்தகர்களுக்கு 18 லொறிகளில் ஏ-9 பாதையூடாக பொருட்கள் வந்தன

ஏ-9 பாதையூடாக 18 லொறிகளில் 20 தனியார் வர்த்தகர்களுக்கு நேற்று பொருட்கள் எடுத்து வரப்பட்டுள்ளன. இவற்றில் பால் மா வகைகள், மருந்து வகைகள், கட்டடப் பொருட்கள், பிஸ்கட், மென்பான, பலசரக்குப் பொருட்கள் எடுத்து வரப்பட்டுள்ளன. நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் யாழ்ப்பாணம் வந்துள்ள 20 லொறிகளில் இருந்தும் பொருட்களை இறக்கும் பணி யாழ்.அரச அதிபர், யாழ்.செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் யாழ்.வணிகர் கழக பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாக இடம்பெற்றன. இதேவேளை மேற்படி லொறிகளில் இன்று புகையிலை வெங்காயம், பீற்றூட் மற்றும் கடலுணவுகள் என்பன கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படும் எனத் தெரியவருகிறது. (ந-5)

## ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இலங்கைப் பிரச்சினை விவகாரம்

### உறுதி செய்யும் முயற்சியில் பிரிட்டன் தீவிரம்

(லண்டன்)

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் இலங்கை நிலைவரம் குறித்து முழுமையான விளக்கமொன்று அளிக்கப்படுவதை உறுதி செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக பிரிட்டன் தெரிவித்துள்ளது.

பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில், அந்நாட்டின் பொதுநலவாய மற்றும் வெளிவிவகார அமைச்சர் (12ஆம் பக்கம் பார்க்க)

## கிராமசேவையாளர் உட்பட 46 பேர் ஷெல், ஆர்.பி.ஜி. தாக்குதல்களில் பலி

### மேலும் 96 பேர் படுகாயம்

(கொழும்பு)

வன்னியில் படையினர் நேற்று நடத்திய எறிகணை மற்றும் ஆர்.பி.ஜி. தாக்குதல்களில் 17 சிறுவர்களும் கிராமசேவையாளரும் உட்பட 46 பேர் உயிரிழந்துள்ளனர். 96 பேர் காயமடைந்துள்ளனர்.

அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதிகளான மாத்தளன், அம்பலவன்பொக்கணை, முள்ளிவாய்க்கால் மற்றும் வலைஞர்மடம் ஆகிய பகுதிகள் மீதும் மாத்தளன் (02ஆம் பக்கம் பார்க்க)



சிறுவர்களை மீட்போம்

சிறுவர் ஆட்சேர்ப்பை நிறுத்து

போருக்கு சிறுவர்களை ஆட்சேர்ப்பது இலங்கை மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு முரணானது. இந்தப் பிரச்சினையில் இலங்கை அரசாங்கம் பூரண எதிர்ப்புக் கொள்கையைக் கடைப்பிடிக்கிறது.

புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதி செயலகம்

unicef

# விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் 21 சதுர கிலோமீற்றரே உள்ளது

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

விடுதலைப் புலிகள் நேற்று 21 சதுர கிலோ மீற்றருக்குள் மட்டுப்படுத்தப்பட்டு விட்டனர். பளை,மாத்தளன் ஆகிய பகுதிகளுக்கு வட பகுதியில் படை நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன.

மேலும் புதுக்குடியிருப்பு பிரதேசத்திலும் படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இராணுவ பேச்சாளர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

ஊடக மத்திய நிலையத்தில் நேற்று நடைபெற்ற மாநாட்டில் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது;

நேற்றைய் தினம் வெலிக்கந்தை பிரதேசத்தில் நான்கு விவசாயிகள் ஆயுததாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். நான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

இரவு நேர காவலில் ஈடுபட்டிருந்த விவசாயிகள் மீதே குறிப்பிட்ட ஆயுததாரிகள் துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளனர்.

இவர்கள் விடுதலைப் புலிகளாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. அப்பிரதேசத்தில் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் தேடுதல் நடவடிக்கையினை ஆரம்பித்துள்ளனர்.

அதேவேளை நேற்று முன்தினம் காலை 4 மணியளவில் வாகரை பிரதேசத்தில் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட தேடுதலில் 5 கிலோ கிராம் எடை கொண்ட கிளைமோர் குண்டு கைப்பற்றப்பட்டுள்ளது.

யுத்த பிரதேசத்திலிருந்து பாதுகாப்பு பிரதேசத்தை நோக்கி வரும் பொது மக்களின் தொகை அதிகரித்துள்ளது. இதுவரையில் 55

பட்டுள்ளன.

இரணைப்பாலை தெற்குப் பகுதியில் படையினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் பொட்டு அம்மானின் பாதுகாப்பு அரண் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது இவ்வாறு அவர் தெரிவித்தார்.

(ச-5)

# அலங்கார உற்சவம்

(கந்தர்மடம்)

கந்தர்மடம் அன்ன சத்திர ஒழுங்கை அருள் மிகு வேம்படி சித்தி விநாயகர் தேவஸ்தான மணவாளக்கோல அலங்கார உற்சவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 14 நாட்கள் நடைபெறும்.

பதின்னான்காம் நாள் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு மணவாளக்கோல தினத்தை முன்னிட்டு சங்காபிஷேகமும் மாலை வசந்த மண்டபப்பூசையும்,திருவூஞ்சலும் நடைபெற்று விநாயகர், கிராமத்தினூடாக வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும்.

(ச-14)

# விபத்து சம்பவங்களில் நேற்று இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்

# இன்று ஒரு தகவல்

## பொய் முகம்!

"இருக்கிற குழப்பத்தில் எனக்குப் பைத்தியமே பிடித்து விடும் போல இருக்கு சேர்!" என்றார் என்னுடைய நண்பர்.

ஏதோ இதுவரைக்கும் அது பிடிக்காதது மாதிரி மனதில் குழப்பமில்லாத மனிதன் யார்? "என் மனதில் குழப்பமே இல்லை. நான் மிகத் தெளிவாகத்தான் இருக்கிறேன்" என்று ஒருவர் சொல்கிறார் என்று வையுங்கள்.

அது அவருக்கே அவரைப்பற்றி தெரியாமல் சொல்லும் வார்த்தை. இப்பொழுது உங்கள் மனதில் குழப்பம் இருக்கிறதா இல்லையா என்பதை நீங்களே தெரிந்து கொள்வதற்கு ஒரு வழி இருக்கிறது என்கிறார் ஓஷோ.

அது என்ன தெரியுமா?

யாருமில்லாத ஒரு இடத்தில் தனியறைக்குள் நுழைந்து பூட்டிக் கொள்ளுங்கள். ஒரு ரேப்றெக்கோடரைப் போட்டு விடுங்கள்.

உங்கள் மனதில் உள்ளதை கொஞ்சம் கூட மறைக்காமல் சத்தம் போட்டுச் சொல்லுங்கள். என்ன தோன்றுகிறதோ அதை அப்படியே சொல்லிவிடவேண்டும்.

அதில் அர்த்தமெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. சுதந்திரமாகப் பேசுங்கள். சத்தம் போடுங்கள். 15 நிமிடம் கழித்து நீங்கள் பேசியதையெல்லாம் போட்டுக் கேளுங்கள். பைத்தியம் பிடித்த ஒருவரின் பேச்சை நீங்கள் கேட்டது மாதிரியே தோன்றும்.

உங்களுக்குள் எவ்வளவு குழப்பம் உங்களுக்குத் தெரியாமல் இருந்திருக்கிறது என்று புரியும். எவ்வளவு அபத்தமான எண்ணங்கள் நமக்குள் இருக்கிறது என்பது தெரியும். ஒன்றுக் கொன்று தொடர்பில்லாத துண்டுகள் நம் மனதுக்குள் மிதக்கிறது விளங்கும்.

இது உண்மை. நீங்கள் வேண்டுமானால் நியாயமாக சோதனை செய்து பாருங்கள். இதற்கு அர்த்தம் என்ன?

பைத்தியக்கார விடுதியில் இருப்பவனுக்கு நூறு சதவீதம் பைத்தியம் பிடித்திருக்கிறது.

நமக்கு அந்தளவுக்கு இல்லை. அவ்வளவு தான். ஆனாலும் நம்நிலை வெளியே தெரிவதில்லை. வெளியே நாம் சரியான மனநிலையில் இருப்பது மாதிரியே தெரிகிறோம்.

மற்றவர்களிடம் நம் மனதுக்குள் இருக்கும் அத்தனையையுமா சொல்லி விடுகிறோம். மற்றவர்களுக்கு நாம் நிறைய மறைத்து விடுகிறோம்.

இதற்காக நாம் தினமும் காலையிலிருந்து இரவு தூங்கப் போவது வரையில் சந்திக்க நபர்களுக்கு தகுந்தாற் போல் நம் முகமூடி மாறிக் கொண்டே இருக்கிறது.

இதில் நாம் மற்றவர்களை ஏமாற்றுவதில்லை. நம்மையே நாம் ஏமாற்றுகிறோம்.

சரி... இதெல்லாம் இருக்கட்டும்.

மனதிலிருந்து குழப்பங்களை நீக்குவது எப்படி? நிதான நிலையை அடைவது எப்படி?

ஒரு பைத்தியக்காரன் மற்றவர்களை பைத்தியம் என்று நினைக்கிறான். தனக்குப் பைத்தியம் என்பது அவனுக்குத் தெரிய ஆரம்பித்து விட்டால்... அதை அவன் உணர ஆரம்பித்தாலே அவன் நிதான புத்தியை அடையும் வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லி விடலாம்.

அதனால் நாம் செய்ய வேண்டியது என்ன தெரியுமா?

நாம் நிதானம் தவறிய நிலையில் இருக்கிறோம் என்பதை முதலில் ஒத்துக்கொண்டு அதை நன்றாக உணர்ந்து கொண்டால் போதும்... நிதான நிலைக்கு நாம் முன்னேறி விடலாம்.

நமக்கு ஏற்படும் விளைவுகளுக்கு நாம் தான் பொறுப்பு என்பதை மனதில் இருத்திக் கொள்ள வேண்டும்.

நமக்குள் ஒரு சரியான மையத்தை ஏற்படுத்தி அதில் நமக்கு நாமே எஜமானனாக உட்கார்ந்து கொள்ள வேண்டும். சரியான திசையில் நம்மை நாமே கொண்டு போக வேண்டும்.

இந்த வேலையில் நாம் தீவிரமாக ஈடுபட்டால் அதன் பின் நாம் பொய் முகத்துடன் அலைய வேண்டிய அவசியமில்லை.

உண்மை முகத்துடன், நிதான நிலையில், பேரானந்தம் அடையலாம். சிரித்து வாழலாம் என்று பெரியவர்கள் சொல்கிறார்கள். இதெல்லாம் நம்முடைய லெவலில் எந்த அளவுக்கு சாத்தியம் என்று தெரியவில்லை. இருந்தாலும் முயற்சி செய்து முன்னேறுவோம்.

இருவர் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"ஏன் சேர்... இந்த உலகத்தில் ஒரே மாதிரி முகத்துடன் ஒன்பது பேர் இருப்பதாகச் சொல்கிறார்கள். அது சாத்தியம்தானா?" என்றார் ஒருவர்.

"சாத்தியம் தான்... ஏன் அப்படிக் கேட்கிறாய்?" என்றார் மற்றையவர்.

"அதற்கில்லை. போனமாதம் உன்னிடம் வாங்கியிருந்த ஆயிரம் ரூபாவை நேற்று உன்னைப் போலவே ஒருவன் வந்து வாங்கி விட்டான். அதுதான் கேட்கிறேன்" என்றான் இவன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தமிழ் கலைஞர் வட்டத்தின் சிறுகதை மதிப்பீட்டு முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

தமிழ் கலைஞர் வட்டத்தினால் 2008 ஆம் ஆண்டின் நான்கு காலாண்டுகளுக்குமான சிறுகதை மதிப்பீட்டு முடிவுகள் அறிவிக்கப் பட்டுள்ளன.

இம் மதிப்பீட்டின் படி நான்கு காலாண்டுகளிலும் முதல் மூன்று இடங்களையும் சிறப்புப் பாராட்டையும் பெற்ற சிறுகதைகளின் பெயர், வெளியான பத்திரிகை ஆசிரியர் ஆகிய விபரங்கள் வருமாறு,

**முதலாம் காலாண்டு**

"பள்ளிக்கூடம்" - வீரகேசரி - மட்டுவில் ஞானக்குமாரன், "நினைவுக்குமிழிகள்" - மல்லிகை, ம.பா. மகாலிங்கசிவம், "பிரதிபலன்" - தினக்குரல் - முதூர் முகைதீன்.

**சிறப்புப் பராட்டைப் பெறும் இரு கதைகள்**

"இறுமாப்பு" - மல்லிகை- தெளிவத்தை ஜோசப், "புளியமரத்து முனிகள்" - தினக்குரல் - செங்கை ஆழியான்.

**இரண்டாம் காலாண்டு**

"தலைவர்களின் கக்கூசு" ஞானம் - சுதர்ம மகாராஜன், "மத மாற்றம்" - தாயகம் தி.சி. ஜெகேந்திரன், "வழிகாட்டிகள்" - கலை முகம், - நிர்மலன், "கனவுலகின் வெளியே" - தாயகம் - பவானி சிவகுமாரன்.

**மூன்றாம் காலாண்டு**

"ஆற்றல்கள்" - தினகரன் - ஸீ. எல்.எம். மன்சூர், "சரக்க இக்கதவம்" - ஞானம் - யோகேஸ்வரி சிவப்பிரகாசம், "குந்தியிருக்க ஒரு வீடு" - தினக்குரல் - அன்புமணி, மட்டக்களப்பு.

**சிறப்பு பாராட்டு பெறும் மூன்று கதைகள்**

"பச்சிலை ஓணான்" - ஞானம் - கே. ஆர்.டேவிட், "ஒப்பாரி கோச்சி" - வீரகேசரி - மு. சிவலிங்கம், "தாய்" - தாயகம் - ச. முருகானந்தன்.

**நான்காம் காலாண்டு**

"ஒரு தாயின் பயணம்" - தினகரன் - யாழ் அஸீம், "புதுசா ஒரு தொர" - தாயகம் - பதுளை சேனாதிராஜா, "நாளைக்கு நத்தார்" - தினகரன் - ஆ.ல. லக்ஷேந்திரகுமார், "நுவரேலியா முதல் சுன்னாகம் வரை" - தினக்குரல் - மு. சிவலிங்கம்

(ஓ-6)

# சுய தொழில் நிவாரணக் கொடுப்பனவு

(சாவகச்சேரி)

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் சுய தொழில் நிவாரணக் கொடுப்பனவின் இரண்டாம் கட்டக் கொடுப்பனவிற்கான காசோலைகள் தென்மராட்சியைச் சேர்ந்த 24 பேருக்கு, பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கீழே பெயர் குறிப்பிடப்பட்டவர்கள் ஆள் அடையாள அட்டை, குடும்ப பங்கீட்டு அட்டை ஆகியவற்றைக் கொண்டு வந்து தென்மராட்சி பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினருடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் செ. ஸ்ரீ நிவாசன் அறிவித்துள்ளார்.


சி. மகேஸ்வரி -குடமியன், வரணி, வி. பரமேஸ்வரி - சரசாலை தெற்கு, இ. ஜெயரஞ்சி - தாவளை, இயற்றாலை, க. இன்பராஜ் - மீசாலை வடக்கு, ப. ஸ்ரீ லங்கேஸ்வரி - கைதடி கிழக்கு, கள்ளி நகர், த. சின்னம்மா - மட்டுவில் கிழக்கு, க. நல்லம்மா - கோயிலாமலை, கொடிகாமம், ஆ. கந்தசாமி - கட்டுக்காணிலேன், சாவகச்சேரி, தே. கிறிஸ்ரி - சரசாலை மத்தி.

செ. புஸ்பராணி - கெற்பெலி மேற்கு, மிருசுவில், ச. சசிகலா - கரம்பை குறிச்சி மேற்கு, வரணி, வே. நந்தினீஸ்வரி - கைதடி தென்கிழக்கு, ந. லோகநாயகி - கென்ஸ்மன் வீதி, சாவகச்சேரி, தி. சேதுலட்சுமி - மீசாலை தெற்கு.

க. நாக முத்து - கைதடி தென்கிழக்கு, த. இராஜேஸ்வரி - குடமியன், வரணி, சி. சிவலட்சுமி - கென்ஸ்மன் வீதி, சாவகச்சேரி.

யோ. கமலம் - கச்சாய் வீதி, கொடிகாமம், நி. புஸ்பராணி - நுணாவில் சந்தி, நா. புஸ்பராணி - குடமியன், வரணி, ஸ்ரீவித்தியா - மட்டுவில் தெற்கு, வ. பத்தினி - நுணாவில் மேற்கு, ச. பாக்கியம் - சராசலை வடக்கு.

(ஓ-29)



தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் அண்மையில் இடம்பெற்ற ஆன்மீக எழுத்தாளர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வின் போது ஆன்மீகத்துறையின் இளம் எழுத்தாளர் நீர்வை தி. மயூரகிரிக்கு பண்டிதர் தி. பொன்னம்பலவாணர் நினைவுக்கேடயம் வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.

# இராசி பலன்

**27.03.2009**
*(பங்குனி 14, வெள்ளிக்கிழமை)*
*பிரதமை முன்னிரவு 9.27 மணிவரை*
*ரேவதி பின்னிரவு 6.06 மணிவரை*
*இராகுகாலம் 10.44 - 12.14 மணிவரை*
*சுபநேரம் 6.14-7.44 மணிவரை*
*நல்லூர் பாணன்குளம் நாச்சியம்மன் கொடியேற்றம்.*


| | |
|---|---|
| மேடம் | சயனசுகக்குறைவு, பிரயாணம், பண விரயம், கோபப்படுதல். |
| இடபம் | தெய்வ தரிசனம், குடும்ப மகிழ்ச்சி, காரிய அனுகூலம், தொழில் வருமானம். |
| மிதுனம் | சுபநிகழ்வு, அதிக பிரயாசை, நண்பர்கள் உதவி, தெய்வ சிந்தை. |
| கடகம் | புதிய திட்டமிடல், உறவினர் வருகை, திடீர்பயணம், கட்டுப்படுதல். |
| சிங்கம் | பெரியோர் வெறுப்பு, முயற்சி தடங்கல், பணக்குறைவு, போசன சுகம். |
| கன்னி | எடுத்த காரியம் கைகூடும், விருந்துபசாரம், தெய்வ தரிசனம், அபூர்வ சந்திப்பு. |
| துலாம் | ஜனவசியம், உற்சாகம், நல்ல முயற்சி, பண வருவாய். |
| விருச்சிகம் | கல்வியில் ஆர்வம், பணக் குறைவு, தொழில்சிந்தை, முயற்சி தாமதம். |
| தனுசு | தன்னம்பிக்கைக் குறைவு, வாக்கு மேன்மை, வாகன சுகம், நண்பர்கள் சந்திப்பு. |
| மகரம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், சகோதரர் உதவி, இனிய சம்பவம், வாக்கு மேன்மை. |
| கும்பம் | வீண் வார்த்தை, பணவிரயம், வேலைச்சுமை, முயற்சி தாமதம். |
| மீனம் | சயன சுகம், புதிய பொருள் சேர்க்கை, தொழில் சிந்தை, விருந்துபசாரம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் 1 Kg | திருநெல்வேலி ரூபா | யாழ்ப்பாணம் ரூபா |
|---|---|---|
| கத்தரிக்காய் | 40 | 50 |
| உருளைக்கிழங்கு | 50-70 | 70 |
| பச்சைமிளகாய் | 40 | 50 |
| தக்காளி | 30 | 40 |
| அவரை | -- | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 70 |
| கோவா | 10 | 20 |
| கரட் | 40 | 50 |
| பூசணி | 15 | 20 |
| புடோல் | 20 | 20 |
| வாழைக்காய் | 70 | 60 |
| சின்ன வெங்காயம் | 25-30 | 30-35 |
| பெரிய வெங்காயம் | 40 | 50-60 |
| பாகற்காய் | 50 | 60 |
| வெண்டிக்காய் | 20 | 40 |
| கரணைக் கிழங்கு | 50 | 40 |
| பயிற்றங்காய் | 20 | 40 |
| லீக்ஸ் | 100 | 110 |
| போஞ்சி | 60 | 80 |
| கீரை - 1 பிடி | 15 | 25 |
| தேசிக்காய் | 140 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 25-30 | 30-35 |

## செல்லப்பா சுவாமிகளின் 94 ஆவது குருபூஜை



நல்லூர் தேரடி செல்லப்பா சுவாமிகளின் 94ஆவது வருடாந்த குரு பூஜை நாளை சனிக்கிழமை, பங்குனி மாத அச்சுவினி நட்சத்திர தினத்தில் நல்லூரில் அமைந்துள்ள செல்லப்பா சுவாமிகளின் நினைவாலயத்தில் காலை 8 மணிமுதல் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை தேவார இசைமணி கே.எஸ்.ஆர். திருஞானசம்பந்தனின் பண்ணிசையும் தொடர்ந்து நற்சிந்தனைப் பாடல்கள் பாராயணமும் இடம்பெறும். இறுதியில் நல்லூர் தேரடியிலும், நினைவாலயத்திலும் விஷேட பூசைகள் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஓ)

## ஆங்கில ஆசிரியர்களுக்கான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

டிப்ளோமா ஆங்கில ஆசிரியர் சங்கத்தின் உயர் கல்வி தொடர்பான முக்கிய கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் பெருமாள் கோவில் முன்பாக அமைந்துள்ள சன்மார்க்க மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் அனைத்து ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு டிப்ளோமா ஆங்கில ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பி.என்.சுதர்சன் கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ-2)

## ஸ்ரீ ராம நவமி ஆராதனை விழா

இணுவில் மருதனார்மடம் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சனேயர் கோவிலின் ஸ்ரீ ராம நவமி உற்சவ பஞ்சரத்ன கீர்த்தனை ஆராதனை விழா எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் காலை 8 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை சங்கற்பம், பஞ்சரத்ன கீர்த்தனை, பாராயணங்கள், திரவிய அபிஷேகம் நவகலச அபிஷேகம், விசேட பூசை, சகஸ்ரநாம அர்ச்சனை என்பன இடம்பெறவுள்ளன. (ஓ-4)

## வருடாந்த பொதுக்கூட்டம்

நல்லூர் சென் பெனடிக்ற் றோ.க.த.க. வித்தியாலய அபிவிருத்தி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் அனைத்து சங்க உறுப்பினர்களையும் தவறாது சமுகம் தருமாறு வித்தியாலய அதிபர் அருட்சகோதரி மரியமலர் யோசவ் கேட்டுக்கொள்கின்றார். (ஓ-30)

## அலங்கார உற்சவம்

தையிலங்கடவை குப்பிளான் தெற்கு முனியப்பர் ஆலய அலங்கார உற்சவம் நாளை சனிக்கிழமை விஷேட அபிஷேக ஆராதனை களுடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 நாட்கள்நடைபெற்று 12ஆம்நாளான ஏப்ரல் 8 ஆம் திகதி சங்காபிஷேகம் நடைபெற உள்ளது. (ஓ-2)

# உள்ளூராட்சி உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி வகுப்புகள் ஏப்ரலில்

(சாவகச்சேரி)

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் வருமானம் சேகரித்தல் தொடர்பாகக் கடமையாற்றும் வருமான வரிப் பரிசோதகர்கள், வருமான மேற்பார்வையாளர்கள் ஆகியோருக்கான பயிற்சிகள் ஏப்ரல் மாதம் 6ஆம், 7ஆம் திகதிகளில் யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது.

இதேவேளை அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளில் உள்ள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆகியோருக்கான அலுவலக ஒழுக்கம் தொடர்பான பயிற்சிகள் ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதி வரை நடத்தப்படவுள்ளது.

வடமாகாண முகாமைத்துவப் பயிற்சி நிலையத்தின் ஏற்பாட்டின் கீழ் யாழ். மாநகர சபையினரால் இப் பயிற்சி நெறிகள் நடத்தப்படவுள்ளதாக யாழ்.மாநகரசபை ஆணையாளர் மு.செ.சரவணபவ அறிவித்துள்ளார். (ஓ-29)

## முறைசாராக் கல்விப் பிரிவினரின் பயிற்சிகளுக்கு விண்ணப்பிக்கவும்

தென்மராட்சி வலயக் கல்லூரி முறைசாரா கல்விப் பிரிவினரால் பூவேலை, எழுத்தறிவூட்டல், ஆங்கிலமொழி அறிவு விருத்தி ஆகிய பயிற்சிகள் ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட உள்ளது.

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில் இயங்கும் சமூக கற்கை நிலையத்தினால் பயிற்றுவிக்கப்பட உள்ள மேற்குறிப்பிட்ட கற்கைகளுக்கு சேர விரும்பும் பாடசாலை கல்வியைப் பூர்த்தி செய்த இளைஞர், யுவதிகள் அதற்கான விண்ணப்பப்படிவத்தினை சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில் பெற்று பூர்த்தி செய்து இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கும் படி வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஓ-29)

## வடமாகாண சுகாதார திணைக்கள நிதியுதவியுடன் ஆயுர்வேத வைத்திய நிலையம் நிர்மாணம்

(பொன்னாலை)

வடமாகாண சுகாதாரத் திணைக்கள நிதியுதவியுடன் அராலி மத்தி கிராம அலுவலர் பிரிவில் புதிய ஆயுர்வேத வைத்தியநிலையம் ஒன்றும் மூலிகைத் தோட்டமும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

அராலி வண்ணபுரம் சிவன் ஆலய பரிபாலன சபையினர் கொள்வனவு செய்து வழங்கிய சுமார் 15 பரப்புக் காணியிலேயே மேற்படி மூலிகைத் தோட்டமும் ஆயுர்வேத வைத்தியசாலையும் நிர்மணிக்கப்பட்டு வருகின்றது.

நிர்மாணிப்பு வேலைகள் துரிதமாக இடம்பெற்றுவருவதாகவும் இவ்வருட நடுப் பகுதியில் இவ்வேலைகள் முற்றுப்பெற்று ஆயுர்வேத வைத்தியசாலை மக்கள் பயன்பாட்டுக்குத் திறந்து வைக்கப்படவுள்ளதாகவும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஓ-49)

## மஹோற்சவம்

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி தேவஸ்தான மஹோற்சவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு தினங்கள் நடைபெற வுள்ளது.

இவ் உற்சவத்தில் ஏப்ரல்மாதம் 6 ஆம்திகதி திங்கட்கிழமை மாலை 3மணிக்கு வேட்டைத்திருவிழாவும், 7ஆம்திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11மணிக்கு தேர்த் திருவிழாவும் 8 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (6)

## அதிபர்களுக்கான கூட்டம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான மாதாந்த கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இதில் சகல அதிபர்க ளையும் தவறாது கலந்துகொள்ளுமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (6-29)

## 'கல்வாரி யாகம்' திருப்பாடுகளின் காட்சி ஞாயிறன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருமறைக் கலாமன்றத்தினால் ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்படும் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பினை சித்திரிக்கும் திருப்பாடுகளின் காட்சி இம்முறை 'கல்வாரி யாகம்' என்னும் பெயரில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முதல் ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி வரை செவ்வாய், வெள்ளி தவிர்ந்த ஏனைய ஆறு நாட்களும் மன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

குறித்த நாட்களில்மாலை 6 மணிக்கு ஆரம்பமாகவுள்ள 'கல்வாரி யாகம்' ஆற்றுகை இரவு 8 மணிக்கு முன்பாக நிறைவடையும். 'கல்வாரி யாகம்' ஆற்றுகை இதற்கு முன்பாக கடந்த 2002 ஆம் ஆண்டில் மேடையேற்றப்பட்டு மிகுந்த வரவேற்பைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இம்முறையும் அரங்கிலும், அரங்கப் பின்னணியிலுமாக நூற்றுக்கும் அதிகமான கலைஞர்களின் பங்கேற்பில் பிரமாண்டமான அரங்கில் 'கல்வாரி யாகம்' அரங்கேறவுள்ளது. 'கல்வாரி யாகம்' ஆற்றுகைக்கான எழுத்துரு, நெறியாள்கையை திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ. யோண்சன் ராஜ்குமார் மேற்கொண்டுள்ளார். (6)

## பருத்தித்துறை நவீனசந்தை கடை வாடகையாளர்களுக்கு

பருத்தித்துறை நகர மத்தியில் நெக்டெப் நிறுவன நிதிமூலம் அமைக்கப்பட்டு வரும் பருத்தித்துறை நவீன சந்தையிலுள்ள கடைகளை வாடகைக்கு விடுவது சம்பந்தமாகத் தீர்மானமெடுக்க வேண்டியுள்ளதால், 1983, 1990 ஆம் ஆண்டு காலப் பகுதியில் உடைந்த பருத்தித்துறைப் பொதுச் சந்தைக் கடைகளின் வாடகையாளராக இருந்தவர்கள் தாங்கள் நகர சபைக்கு ஒரேமுறையில் செலுத்திய பண விபரம் மற்றும் ஒப்பந்தப் பத்திரம் ஆகியவற்றுடன் நகரசபைக் காரியாலத்துடன் தொடர்புகொள்ளுமாறு பருத்தித்துறை நகர சபைச் செயலாளர் கேட்டுக்கொள்கின்றார். (ஓ)

## நகரசபைத் தேவைக்கு காணி கொள்வனவு

பருத்தித்துறை நகரசபையின் தேவைக்காகப் பருத்தித்துறை தும்பளை வீதியில் மகாலட்சுமி படமாளிக்கைக் கட்டடம் அமைந்துள்ள திருமதி. காமாட்சி முத்துக்குமாரசாமி சர்மாவுக்குச் சொந்தமான காணியைக் கொள்வனவு செய்ய ஆலோசிக்கப்படுவதால் இக் காணியை நகரசபைத் தேவைக்குக் கொள்வனவு செய்வது சம்பந்தமாக ஆலோசனை, அபிப்பிராயம், ஆட்சேபனை தெரிவிக்க விரும்புவோர் எழுத்துமூலம் தெரிவிக்கலாமென பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் தெரிவித்துள்ளார். (ஓ)

## செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்தில் பாடசாலை செல்லாத வரவு ஒழுங்கீனமான இடைவிலகிய பிள்ளைகளுக்கான எழுத்தறிவூட்டல் வகுப்பில் கற்பிக்கும் போதனாசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து பிற்பகல் 4.30 மணிவரை யாழ்.கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் எழுத்தறிவூட்டல் நிலையங்களைச் சேர்ந்த போதனாசிரியர்களை தவறாது கலந்துகொள்ளும்படி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுக் கொள்கின்றார். (ஓ-30)

## யாழ்.செய்திகள்


## வளர்ப்பு நாய்களுக்கான கருத்தடை மருந்தேற்றல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்குப் பகுதியிலுள்ள வலிக்கண்டி, மணற்காடு நலன்புரி நிலையம், குடத்தனை மேற்கு ஆகிய பிரதேசங்களிலுள்ள பெண் நாய்களுக்கான கருத்தடை ஊசி மருந்தேற்றல் நாளை சனிக்கிழமை காலை அப் பகுதிகளில் வைத்து வழங்கப்படவுள்ளது.

எனவே அப் பகுதியில் உள்ளோர் தமது பெண் நாய்களைக் கொண்டு வந்து இத் தடுப்பூசியினை ஏற்றிக்கொள்ளுமாறு அம்பன் பிரதேச பொது சுகாதாரப் பரிசோதகர் க.இளங்கோ கேட்டுக்கொள்கின்றார். (ஓ-2)








தீவக லயன்ஸ் கழகத்தின் நெடுந்தீவு மக்களிற்கான மாபெரும் சேவைத் திட்ட முகாம் கடந்த மாதம் யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய கலாநிதிகளால் நடத்தப்பட்டது.

இச் சேவைத்திட்ட முகாமை மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும், பொது மருத்துவப் பரிசோதனை மற்றும் கண்ணாடி வழங்கல் ஆகியன இடம்பெறுவதையும் படங்களில் காணலாம்.

# இலங்கையில் தமிழர் 106

## ஹெளவரும் தமிழரும்

### உறுதிபெற்ற இனக்குழுக்கள்

### 900-1070

சோழ நிர்வாக அமைப்பில் ஊர் நிர்வாகம் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றது. போர்களும் குழப்பங்களும் நடைபெற்ற காலங்களில் ஊர் நிர்வாகம் ஓர் உறுதி நிலையை மக்களுக்குக் கொடுத்தது.

ஊரை நிர்வகிப்பதற்கு ஒரு முன்னேற்றமான நிர்வாக முறை தமிழ் நாட்டில் பல நூற்றாண்டுகளாக வளர்க்கப் பட்டுச் சோழர் காலத்தில் மிகவும் முன்னேற்றமான நிலையை அடைந்திருந்தது. இந்த நிர்வாகம் சோழர் ஆட்சியின் போது இலங்கையிலும் அறிமுகப் படுத்தப்பட்டது.

பிராமணக் குடியிருப்புக்களாகிய சதுர்வேதி மங்கலம் எனப்பட்ட ஊரில், ஊர் நிர்வாகத்துக்குச் சபை என்ற நிறுவனம் இருந்தது. ஏனைய ஊர்களுக்கு ஊர் என்ற நிறுவனம் இருந்தது. இதற்கு எடுத்துக்காட்டாக கந்தளாயில் இருந்த பிராமணக் குடியிருப்பு ஒரு சதுர்வேதி மங்கலமாக அமைந்தது. அதற்குச் சோழர் ஆட்சியின்போது ராஜராஜச் சதுர்வேதி மங்கலம் என்ற பெயர் கொடுக்கப் பட்டது.

சோழர் ஆட்சிக்குப் பின் விஜயபாகு மன்னன் பெயரால் விஜயராஜச் சதுர்வேதி மங்கலம் என்ற பெயர் கொடுக்கப்பட்டது.

சதுர்வேதி மங்கலத்தின் சபை மஹாஸபா என்ற சம்ஸ்கிருதப் பெயரைப் பெற்றிருந்தது. அதற்கான தமிழ்ச் சொல்லான பெருங்குறி இச் சபையாரால் பயன்படுத்தப்பட்டது. சபையின் உறுப்பினர் பெருங்குறிப் பெருமக்கள் எனப்பட்டனர்.

தமிழ்நாட்டிற் போல, இச் சபையினர் நீர்ப்பாசன வசதிகளின் பராமரிப்புக்குப் பொறுப் பேற்றிருந்தனர். கந்தளாய் நீப்ப்பாசனக் குளத்தின் விக்கிரமசோழ வாய்க்கால் போன்ற கால்வாய் மற்றும் கண்ணாறு ஆகியவற்றின் பராமரிப்புக்குப் பெருங்குறி நிதி ஒதுக்கீடு செய்து நீர்ப்பாசன வசதிகளைக் கவனித்தது. இத்தகைய நிர்வாகத்துக்கு மூத்த வகை மாணி போன்ற அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறான ஊர் நிர்வாக ஒழுங்குகள் சோழர் ஆட்சியின் போது பிற ஊர்களிலும் சதுர்வேதிமங்கலங்களிலும் நிலவியிருக்கும் எனலாம். அதேபோல, நாடு மற்றும் வளநாடு ஆகிய பெரிய நிர்வாகப் பிரிவுகளிலும் தமிழ் நாட்டு நிர்வாகமுறை இருந்திருக்கும்.

**கோயில்கள்**

சோழர் ஆட்சியின்போது பௌத்த சைவ நிறுவனங்கள் பற்றிய செய்திகளும் கல்வெட்டுக்களிலிருந்து கிடைக்கின்றன. ஏற்கனவே பிரசித்தி பெற்றிருந்த சிவன் கோயில்களாகிய மாதோட்டத்துத் திருக்கேதீஸ்வரமும் திருகோணமலையின் கோணேஸ்வரமும் பெரும் ஆதரவைப் பெற்ற நிறுவனங்களாக விளங்கியிருக்கும் என்று கொள்ளலாம். ஆனால் அவ்விரண்டு கோயில்களும் 17 ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கீசரால் முற்றாக அழிக்கப்பட்டமையால் அவற்றில் இருந்திருக்கக் கூடிய ஆவணங்கள் அதிகம் கிடைக்கவில்லை.

அக் கோயில்களின் கற்களைப் போர்த்துக்கீசர் கோட்டைகளை அமைக்கப் பயன் படுத்தியதால் ஒரு சில அக் கோட்டைகளில் கிடைத்துள்ளன.

திருக்கேதீஸ்வரம் மற்றும் கோணேஸ்வரம் ஆகியவற்றை விட, சோழ மன்னர் பெயர்களைப் பெரும்பாலும் பெற்ற கோயில்களாகப் பல கோயில்கள் இருந்தன. மாதோட்டத்தில் ராஜராஜேஸ்வரம் மற்றும் திருவிராமீஸ்வரம் என்ற இருகோயில்கள் இருந்தன. ராஜராஜேஸ்வரம் என்ற கோயில் தாழி குமரன் என்ற சோழ அதிகாரியால் கட்டப்பட்டது.

கந்தளாயில் பின்னர் விஜயராஜ ஈஸ்வரம் எனப் பெயர் பெறும் கோயிலும் அப் பெயரைப் பெறுமுன் ராஜராஜேஸ்வரம் என்ற பெயரைக் கொண்டிருந்திருக்கலாம்.

ராஜராஜனின் இன்னொரு பெயரால் பதவி யாவில் இருந்த கோயில் ஒன்று ரவி குலமாணிக்க ஈஸ்வரம் எனப்பட்டது. அத்தாக்கட என்ற இடத்தில் உத்தமசோழ ஈஸ்வரம் என்ற கோயிலும், மதிரிகிரியாவில் பண்டித சோழ ஈஸ்வரமும் இருந்தன.

கூடுதலான கோயில்கள் பொலநறுவையில் இருந்தன. அவற்றுள் முக்கியமானது ராஜேந்திரசோழனுடைய தாயாரின் பெயரைப் பெற்றிருந்த வானவன்மாதேவி ஈஸ்வரம்.

இலங்கையில் சோழர் கட்டடப் பாணியில் அமைக்கப்பட்ட கட்டடங்களுள் மிகச் சிறந்தது வானவன்மாதேவி ஈஸ்வரமாகும். அது இலங்கையில் வளர்ந்த தமிழர் கட்டடக் கலையின் வரலாற்றில் மட்டுமின்றி, பொதுப்படப் பொலநறுவையில் வளர்ந்த கட்டடக் கலையின் வரலாற்றிலும் நிகரற்றதாக இருக்கின்றது.

இதற்குக் காரணம் பொலநறுவையில் உள்ள கட்டடங்கள் அனைத்திலும் இன்று முழுமையாகக் கல்லினால் கட்டப்பட்டுக் காணப்படும் ஒரே ஒரு கட்டடம் இதுவாக இருப்பதே.

கருங்கல்லும் சுண்ணக்கல்லும் கலந்து கட்டப்பட்ட இக் கட்டடம் தென்னிந்தியாவில் உள்ள சோழர் காலக் கட்டடங்களின் சிறப்பியல்புகள் பலவற்றை உடையதாக விளங்குகின்றது.

இக் கோயிலுக்குரிய இன்னொரு தனிச் சிறப்பு என்னவென்னில், இன்று இலங்கையில் உள்ள மிகப் பழைய, முழுமையாகப் பேணப் பட்டுள்ள சைவக் கோயிலாக இது விளங்குவதாகும். இதனால், சோழர் ஆட்சியின் போது கட்டப்பட்ட பல நிறுவனங்களுள் இதுமட்டுமே இன்று அழியாது எஞ்சியுள்ளது எனலாம்.

பேராசிரியர்
கா. இந்திரபாலா

பொலநறுவையில் சோழர் கட்டடப் பாணியில் அமைக்கப்பட்ட மேலும் பல கோயில்களின் அழிபாடுகள் காணப்படுகின்றன. அவற்றுள் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது ஐந்தாவது சிவதேவாலயம் எனப் பொதுவாகப் பெயர் பெறும் சிவன் கோயிலாகும். இதன் உண்மையான பெயரை அறிந்து கொள்ளக் கல்வெட்டுச் சான்று கிடைக்கவில்லை.

வானவன் மாதேவி ஈஸ்வரத்துக்கு அடுத்ததாகச் சிறப்புப் பெறும் சோழர் காலக் கட்டடம் இது என்று மதிப்பிடலாம். (தொடரும்)

**வாசகர்களின் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன**

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச் சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை 26

பராக் ஒபாமா ஈரான் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளுடனான உறவை சீரமைக்க அண்மையில் அவர் விடுத்திருக்கும் சமாதான அழைப்பின் ஆரம்பம் லோலோ இட்ட அடித்தளத்திலிருந்து வெளிப்படுகிறதோ என்று எண்ணாமல் இருக்க முடியவில்லை.

திருமதி லோலோ-ஒபாமாவின் தாய் லோலோவுக்கு மனதால் நன்றி செலுத்தினாள். தன் மகனிடம் அவர் அன்பாகப் பழகினார். அந்த வகையில் தான் அதிர்ஷ்டசாலி என்று எண்ணினாள். அவள் மனக்கண்ணில் தான் தன் மகனையும் கூட்டிக் கொண்டு முன்பின் தெரியாத நாட்டிலே வந்து இறங்கிய காட்சி ஓடியது. அப்போது அவளுக்கு வயது இருபத்து நான்கேதான்.

கணவனின் பழைய வரலாறு அவளுக்குத் தெரிந்திருக்கவில்லை. அப்போது அவள் எதையும் நம்பிவிடும் அப்பாவிப்பிள்ளை. அறியாமை அவளை அமெரிக்க கடவுச்சீட்டுடன் இவ்வளவுதூரம் கொண்டுபோய்விட்டது. கடவுள் இந்தளவிலாவது காப்பாற்றிவிட்டார். நிலைமை மோசமாகிக் கூட போயிருக்கலாம் அல்லவா?

எனினும் புதிய வாழ்வில் இன்னல்கள் நிறைந்திருக்கும் என்பது அவள் எதிர்பார்த்ததே. ஹவாயை விட்டு நீங்குவதற்கு முன் இந்தோனேஷியா பற்றி படித்தாள். அது உலகின் சனத்தொகையில் ஐந்தாவது இடத்தைப் பிடித்திருந்தது. பல்லின- பன்மொழி பேசுகின்ற நாடு.

அது டச்சுக்காரரின் குடியேற்ற நாடாக 300 ஆண்டுகள் அடிமைப்பட்டுக் கிடந்தது. அதன்பின் யப்பானியர்கள் இரண்டாம் உலக மகா யுத்த காலத்தில் அதன் இயற்கை வளங்களை சூறையாடும்பொருட்டு பிடித்தாண்டனர். உலக யுத்தம் முடிந்ததும் சுதந்திரப் போராட்டம் ஆரம்பித்தது. அதிலிருந்து எழுந்தார் சுகர்ணோ என்ற போராளி. அவர்தான் அந் நாட்டின் முதலாவது ஜனாதிபதியானார்.

அண்மையில்தான் அவரை இரத்தம் சிந்தாமல் ஆட்சியிலிருந்து கவிழ்த்து தானே ஜனாதிபதியானார் சுகர்த்தோ என்பவர்.



நாடு இன்னும் வளர்ச்சியடையவில்லை.

ஜகார்த்தாவில் வந்து இறங்கியதும் சொல்லொணாத் துன்பத்துக்கு ஆளாகினார். வயிற்றுப்போக்கு, காய்ச்சல், குளிர்ந்த நீரில் குளிப்பு, அடிக்கடி மின்சாரவெட்டு, தாங்க முடியாத வெப்பம், எல்லையற்ற நுளம்புத் தொல்லை என்று இன்னோரன்ன இன்னல்களைத் தாங்கத் தயாராகத் தான் வந்தாள்.

முதற்கணவர் நீங்கிய பின் அவள் தன் உணர்வுகளை இறுக்கமாக்கினாள். அவளை அறியாமலே இந்த மாற்றம் ஏற்பட்டது. புதிய கணவருக்கு நாட்டைக் கட்டியெழுப்ப உதவ வேண்டும் என்ற ஆசை அவளை உந்தியது. ஆகவே எதையும் தாங்கும் இதயத்தை வரவழைத்துக் கொண்டு கணவனுக்கு தோள் கொடுக்க முனைந்தாள்.

ஆனால் அவளால் தனிமையைத் தாங்க முடியவில்லை. ஆரம்பத்தில் லோலோ அவளை எந்தவிதத்திலும் துன்பம் எதுவும் அணுகாமலிருக்க தன்னாலான எல்லாவற்றையும் செய்தார். ஹவாயில் படிக்கும்போது அவர் எப்போதும் கலகலப்பாக இருப்பார். பல திட்டங்கள் பற்றிப் பேசுவார். தான் படித்து முடித்து நாடு திரும்பியதும் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணிபுரியப் போவதாகக் கூறினார்.

இப்போது என்ன நடந்துவிட்டது? ஏன் அவர் முன்னர்போல் அளவளாவுவது இல்லை? இப்போது பேசுவதையே நிறுத்திக் கொண்டார். ஏதாவது கேட்டால் மாத்திரம் தான் பதில் வரும். தனது பிரகாசமான பகுதிகளையெல்லாம் தன்னுள் அடக்கிக் கொண்டு எட்டாத இருளடர்ந்த மறைவான இடத்தில் தன்னை மறைத்துக் கொண்டது போலக் காட்சியளித்தார்.


இரவு நேரங்களில் எல்லோரும் நித்திரையான பிறகு எழுந்து விஸ்கி போத்தலைக் கையிலெடுத்துக் கொண்டு வீட்டினுள் ஆழ்ந்த யோசனையோடு அங்கும் இங்குமாக உலாவுவார். சில இரவுகளில் தலையணையின் கீழ் ஒரு கைத்துப்பாக்கியை மறைத்து வைத்துக் கொண்டு படுப்பார். கேட்டால் ஏதேனும் சொல்லித் தட்டிக் கழித்து விடுவார்.

எப்படியோ வார்த்தைகளை அதுவும் உணர்வார்ந்த வார்த்தைகள் அவளிடமிருந்து வரும்போதெல்லாம் அவற்றை அவரால் நம்ப முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. ஆயினும் அவள் அதற்கு தன் கணவனின் தொழிலில் ஏற்பட்ட பிணக்கு ஏதேனும் காரணமாயிருக்கலாம் என்று நினைத்தாள்.

ஜம்பொன்

அவள் வந்தபோது அவர் இராணுவத்தில் மண் ஆராய்ச்சியாளராகப் பணிபுரிந்தார். வேலை மிகவும் பழுவானது. சம்பளம் குடும்பச் செலவுக்கே போதாது. குளிர்சாதனப் பெட்டியொன்று வாங்கினார்கள். அதன் விலையைக் கொடுப்பதில் அவரின் இரண்டு மாதச் சம்பளம் தீர்ந்துபோய்விட்டது. இப்போது மனைவி ஒரு மகன் எவ்வாறு சரிக்கட்டுவது? மன அழுத்தம்! அவள் இவ்வளவு தூரம் பயணித்து வந்தது அவருக்குத் தானும் மகனும் பாரமாக இருப்பதற்காகவா? தானே தன் சிலுவையை சுமக்கத் தீர்மானித்து விட்டாள். (தொடரும்)

# வன்னியில் பேரவலம்...



முல்லைத்தீவு புதுமாத்தளன் பாதுகாப்பு வலயப் பகுதியில் இடம்பெற்ற வான் ;எறிகணைத் தாக்குதல்களில் காயமடைந்தவர்களைப் படங்களில் காணலாம்...

## முதலாவது தொழில்நுட்ப பல்கலைக்கழகம் இரத்மலானையில்

### ஜனாதிபதி அடுத்தவாரம் திறந்து வைக்கிறார்

(கொழும்பு)

இரத்மலானையில் அமைக்கப்பட்டுள்ள இலங்கையின் முதலாவது தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 31ஆம் திகதி திறந்து வைக்கவுள்ளதாக வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்ப பயிற்சி அமைச்சர் பியசேன கமகே தெரிவித்தார்.

இந்த தொழில்நுட்பவியல் பல்கலைக் கழகம் தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில், உயர் கல்வி வாய்ப்பை இழந்த நிலையில் பாடசாலையை விட்டு விலகிச்செல்லும் நாட்டின் இளம் சந்ததியினருக்கு முறையான பயிற்சிகளை வழங்குவது அரசாங்கத்தின் நோக்கமாகும்.

நாடுபூராகவும் உள்ள தொழில்நுட்ப நிறுவனங்களில் தற்போது 70 ஆயிரம் பேர் வரை பயில்கின்றனர். இந்த எண்ணிக்கையை ஒரு இலட்சமாக அதிகரிக்க அரசு திட்டமிட்டுள்ளது.

இரத்மலானையில் உள்ள தேசிய கைத்தொழில் கற்கை நிறுவன வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த தொழில்நுட்ப பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக பேராதனைப்பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தரான பேராசிரியர் கபில் குணசேகரவை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

இலங்கையின் தொழில் பயிற்சிக் கல்வியை உயர்தரத்தில் பேணுவதற்கு தேசிய தொழில்சார் மதிப்பீட்டுச்சான்றிதழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் ஊடாக சகல கற்கை நெறிகளும் சம காலத்திற்கு பொருத்தமான வகையில் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. மருதானை மற்றும் யாழ்ப்பாணம் உட்பட நாடு முழுவதிலும் 9 தொழில்நுட்ப கல்லூரிகள் தரம் உயர்த்தப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (5)

## தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சை

## யாழ்.நலன்புரி முகாம்களில் விண்ணப்பப்படிவங்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ.நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மாணவர்களில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ளவர்களுக்கு அப்பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்பட்டுள்ளதாக யாழ். மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் வி.ரி.செல்வரட்ணம் தெரிவித்தார்.

இப்பிரத்தியேக விண்ணப்பப் படிவத்தில் மாணவரின் விபரங்கள், இடம்பெயர்வதற்கு முதல் கல்வி கற்ற பாடசாலை , மாவட்டம் என்பன குறிப்பிடப்பட்டு மாணவரின் கையொப்பம் ,பெற்றோரின் கையொப்பம் , நலன்புரி முகாம் காப்பாளரின் கையொப்பம் மற்றும் நலன்புரி முகாம் அமைந்துள்ள கல்வி வலய கல்விப் பணிப்பாளரின் கையொப்பம் என்பன இடப்படவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கான பணிகளை தாம் ஒவ்வொரு நலன்புரி முகாம்களுக்கும் நேரில் சென்று மேற்கொண்டுவருவதாகவும் குறிப்பிட்ட யாழ். மேலதிக கல்விப்பணிப்பாளர் வி.ரி.செல்வரட்ணம் நேற்று மிருசுவில் நலன்புரி முகாமிற்குச் சென்று அங்கு தங்கியுள்ள 47 மாணவர்களின் விண்ணப்பப் படிவங்களையும் பூர்த்தி செய்ததாகத் தெரிவித்தார். (5)

## டயிள்யூ .எச். ஓ வின் விசாரணை அறிக்கை இன்று கையளிப்பு

ருபெல்லா தடுப்பு மருந்து ஒவ்வாமை குறித்து ஆராய்வதற்காக இலங்கைக்கு வருகை தந்துள்ள உலக சுகாதார ஸ்தாபனத்தின் மருத்துவ நிபுணர்கள் குழுவினர் தங்களது இடைக்கால அறிக்கையை சுகாதார அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவிடம் இன்று கையளிக்கவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த 22 ஆம் திகதி இலங்கைக்கு வருகை தந்த இந்த மருத்துவ நிபுணர்கள் மறுநாள் அமைச்சரைச் சந்தித்துக் கலந்துரையாடியதுடன் மாத்தறைக்கு நேரில் சென்று ருபெல்லா தடுப்பு மருந்து ஒவ்வாமை தொடர்பான ஆய்வுகளில் ஈடுபட்டனர்.

இவர்கள் மாத்தறையில் ருபெல்லா தடுப்பு மருந்து ஒவ்வாமைக்கு உள்ளான மாணவிகள் கற்கும் பாடசாலைக்கும் மாணவிகளின் வீடுகளுக்கும் நேரில் சென்று விசாரணைகளை நடத்தியதோடு, ருபெல்லா தடுப்பு மருந்து தொடர்பாகவும் பரிசோதனைகளை மேற்கொண்டனர். இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளையும் பரிசோதனையையும் முடித்துக் கொண்டு இக்குழுவினர் நேற்று முன் தினம் கொழும்பு திரும்பியுள்ளதாகவும் அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது.

மாத்தறை சென்.தோமஸ் உயர்தர மகளிர் கல்லூரியில் 8 ஆம் தர மாணவிகளுக்கு கடந்த 19 அம் திகதி ருபெல்லா தடுப்பு மருந்து வழங்கப்பட்டது. இத்தடுப்பு மருந்த ஒவ்வாமை காரணமாக அக்கல்லூரியில் கல்வி பயிலும் மாணவி ஒருவர் உயிரிழந்தார்.

இச்சம்பவத்தையடுத்து சுகாதார அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா விடுத்தவேண்டுகோளுக்கு ஏற்ப உலக சுகாதார ஸ்தாபனம் இரு மருத்துவ நிபுணர்களை கொழும்புக்கு அனுப்பிவைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

## ஆர்பிஜி உந்துகணையை சத்திரசிகிச்சை மூலம் அகற்றி இளம் பெண்ணின் உயிரைக் காப்பாற்றிய மருத்துவர்கள்



(கொழும்பு)

இலங்கை படையினர் ஏவிய ஆர்பிஜி எறிகணை ஒன்று இளம் பெண் ஒருவரின் காலில் துளைத்து வெடிக்காதிருந்த நிலையில் குறித்த ஆர்பிஜி பாதுகாப்பாக செயலிழக்கப்பட்டு ஆர்பிஜியுடன் பாதிக்கப்பட்ட காலும் சத்திர சிகிச்சை மூலம் அகற்றப்பட்டுள்ளது.

மாத்தளன் மருத்துவமனையின் பின்புறம் வசித்து வந்த 25 வயதுடைய ரவீந்திர ராசா சுதர்சினி என்ற பெண்ணின் காலிலேயே ஆர்பிஜி உந்துகணை துளைத்து வெடிக்காத நிலையில் இருந்து அகற்றப்பட்டுள்ளது.

இந்த பெண்ணின் காலில் ஆர்பிஜி உந்துகணை வெடிக்காத நிலையில் துளைத்ததும் அவசர அவசரமாக மருத்துமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அப்போது மருத்துவர்களும், தாதியர்களும் பெரிதும் அச்சமடைந்து ஆர்பிஜி உந்துகணை வெடிக்கப் போகிறதோ என்று கருதி விலகிச் சென்றனர்.

எனினும் ஆர்பிஜி உந்துகணை பாதுகாப்பாக வெடிக்காத நிலையில் செயலிழக்கப்பட்டது. அதனையடுத்து துரிதமாக செயற்பட்ட மருத்துவர்களும், தாதியர்களும் சிகிச்சையளிக்கும் பணியில் ஈடுபட்டனர்.

ஆர்பிஜி உந்துகணையை எடுப்பதற்கு என்ன செய்வது என்று தெரியாத நிலை ஏற்பட்டது. பின்னர் பயிற்றப்பட்ட ஒருவர் சாதூரியமாக செயற்பட்டு ஆர்பிஜி உந்து கணையை செயலிழக்கச் செய்தார்.

எந்த விதமான அடிப்படை மருத்துவ வசதிகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் எதுவும் இல்லாத நிலையில் இருக்கின்ற உபகரணங்களையும் மருந்துகளையும் பயன்படுத்தி மருத்துவர்கள் வெற்றிகரமாக சத்திர சிகிச்சை செய்து நச்சுத்தன்மை உடலில் மேலும் பரவாத வகையில் பெண்ணின் பாதிக்கப்பட்ட காலை அகற்றினர் என்பது பாராட்டத்தக்கதாகும். (ஓ-5)

# ஆய்வு உத்தியோகத்தர்களுக்கான திறந்த போட்டிப்பரீட்சை முடிவுகள்

வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவினால் நடத்தப்பட்ட ஆய்வு உத்தியோகத் தர்களுக்கான திறந்த போட்டிப் பரீட்சை முடி புகள் செயலாளர், வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப் பட்டுள்ளது.

இப்பரீட்சையில் இடம்பெற்ற கணக்கியல் மற்றும் அலுவலக நடைமுறை, பொது விவே கம் ஆகிய இரு பாடங்கள் ஒவ்வொன்றிலும் 40 புள்ளிகளுக்கு மேல் பெற்ற பரீட்சார்த்தி களின் அடையாள அட்டை இலக்கம் மற்றும் பெற்ற மொத்த புள்ளிகள் ஆகியனவற்றின் விபரம் வருமாறு,

782113500V - 98, 760362590V - 125, 836072960V - 109, 801411398V - 132, 747822093V- 125, 815784065V - 99, 783393786V - 112, 846483128V - 112, 750612954V - 121, 828240404V - 105, 832454940V - 108,803233080V - 97, 740493523V-114.

836824040V - 93, 8251803891V -107, 762101734V - 111, 811821390V - 118, 815462327V - 122 , 721032892V - 128 , 820802446V - 108, 826241730V - 87, 773060630V - 104, 840282732V - 136, 770543436 V - 111.

772573715V - 92, 815172930V - 140, 818032307V - 134, 807841190V - 103, 790613155V - 99, 812632450 V - 117, 815893921V - 122, 827480851V - 115, 817191355V- 137, 811392154V - 96, 855160170V - 124, 820694724V- 123, 781462900V - 124.

802170491V - 123, 812770845V - 104, 810862246V - 131, 792121322V - 128, 828432443V - 119, 836494377V - 90, 807052268V - 130, 811324949V - 131, 802440421V - 101, 775513500V - 160, 812652966V - 138, 817003850V - 132, 825890599V- 102, 817111688V - 108, 798653776V- 134, 811801534V - 147, 808611864V - 131, 828303996V - 108.

810142855V - 116, 772394160V - 88, 816661064V- 114, 800901430V - 122, 818142064V - 126, 816632765V - 114, 807031511V -135, 795042687V - 81, 816783429V - 123, 782843290V - 109, 818290527V - 117, 818242883V - 144, 808131668V - 112, 818151268V - 132, 818381646V- 137, 810912138V - 111, 816631696V - 131, 793091184V - 124, 835622649V - 122.

778101351V - 126, 791081980V - 145, 787792910V - 125, 823262914V - 107, 801574530V - 128, 837882575V - 111, 815352033V - 106, 818232519V - 125, 816542200V - 108, 750541780V - 114, 790883624V - 108, 772533756V - 120, 836632559V - 100, 812622447V - 126, 793540604V - 103, 786943060V - 115, 713371998V - 89.

793433921V - 115, 765151902V -105, 835853470V - 91, 837971810V - 87, 791354269V - 107, 806692905V - 132, 846682929V - 107, 797451754V - 102, 827441368V - 102, 816320224V - 98, 822381880V - 108, 802233787V - 95, 796634375V - 95, 818033001V - 109, 807371231V - 96, 807623478V - 110, 817182810V - 91, 820213300V - 97.

845013578V - 123, 787013384V - 116, 841803205V - 110, 796703539V - 114, 815773179V - 121, 812192205V- 107, 818563140V - 101, 781130370V - 98, 815671910V - 100, 810102640V - 120, 846272492V - 94, 845201552V - 106, 837972175V - 103.

818444834V - 110, 837122457V - 96, 807950800V - 101, 753193090V- 104, 833202812V - 96, 810204397V - 89, 803310688V - 103, 786954070V - 106, 787653707V - 98, 800212472V - 108, 732570195V - 94, 790363604V - 101, 783123681V - 91, 813144158V - 101, 767491425V - 99.

795070613V - 109, 796531584V - 103, 845111537V - 99, 846842020V - 117, 762902842V - 90, 818030630V - 99, 810110260V - 116, 817874410V - 117, 815060504V -111, 825102043V -126, 806742317V - 84, 806281964V - 110, 827051977V - 114, 817753035V - 112, 827521558V - 99.

828380990V - 120, 802323310V - 103, 817782248V - 120, 813373290V - 93, 790864204V - 123, 813201151V - 90, 720030233V - 102, 792342132V - 86, 803470871V - 110, 801031951V - 125, 805822139V - 120, 782681150V - 94.

823493606V - 107, 820022912V - 82, 796792329V - 112, 811273252V - 117, 820252055V - 101, 796872632 - 99,

817571832V - 116, 812671979V - 118, 778141213V - 110, 680633177V - 108, 812493531V - 89, 722553799V - 116, 761361783V - 91, 808213907V - 91, 831473193V - 87.

761051539V - 92, 807643932V - 96, 752860963V - 131, 732962859V - 101, 803480451V - 82, 823312920V - 110, 810881151V - 104, 760882119V - 89, 806484377V - 114, 788234465V - 84, 806773409V - 91, 808545594V - 120, 813353008V - 118, 810020423V - 98, 777102885V - 110, 763590968V - 99, 778020424V - 97, 786773504V - 96, 825082670V - 125, 808311992V - 126, 827900265V - 120, 780801468V - 92, 793602111V - 103, 751753560V - 112.

# பலமான விடுதலைப் புலிகள் அமைப்பை உடனடியாக அழிப்பது கடினமாகும்

## அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவிப்பு



விடுதலைப் புலிகள் பலமாக இருந்த ஓர் அமைப்பு என்பதனால் அவர்களை உடனடியாக அழிப்பது என்பது கடினமான காரியமாகும்.

புலிகளை முற்றாக அழிப்பதற்கு சில காலம் எடுக்கும் என்று அமைச்சர் விநாயக மூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

பழமைகளை மறந்து புதுமையை பற்றிச் செல்ல வேண்டும். அதன் மூலமாகவே ஏற்பட் டிருக்கும் கசப்புணர்வை இல்லாதொழிக்க முடியும்.

இந்நிலையில் தமிழ் மக்களின் நல னில் கூட்டமைப்பு விருப்பம் கொண்டிருக்குமா யின் கூட்டமைப்பினர் ஜனாதிபதியுடன் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரே ரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்று கையில்,

மூவின மக்களையும் மதிக்கின்ற போது தான் வளர்ச்சியும் அபிவிருத்தியும் ஏற்படும். கிழக்கு மாகாண சபையில் இடம்பெறுகின்ற தவறுகளை ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளேன். அதிகாரங்கள் தேவை எனினும் சகல மக்களும் ஏற்றுக் கொள்ள கூடிய அதிகாரங்களே தேவையானதாகும்.

வடக்கு கிழக்கு இணைப்பை பற்றி பேசிக் கொண்டிருக்கின்ற இந்த நிலையில் வடக்கு கிழக்கு இணைப்பிற்காக கிழக்கு மாகாண மக் களின் அபிலாசைகளை தெரிந்து கொள்ள வேண்டும். அபிவிருத்தித் திட்டங்களை முன் னெடுத்து செல்கின்ற போது இடம்பெயர்வு கள் நகர்தல்கள் இடம்பெறும்.

உலக மாற்றத்திற்கு ஏற்ற வகையில் கிழக் கில் தொழில் கிராமங்கள் ஏற்படுத்தப்படு கின்றன. இதன் போது இடப்பெயர்வுகள் ஏற் படுமாயின் அவர்களுக்கு தேவையான சிறந்த வளங்களை ஏற்படுத்திக் கொடுப்ப தற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றது.

மாகாண சபை முறையின் ஊடாக பொலிஸ் அதிகாரம் தேவையில்லை அவற்றை கொண்டு வந்தால் மீண்டும் பிரச்சினை வரும். அதி காரங்களை பகிர்ந்தளிக்கின்ற போது சகல இன மக்களும் ஏற்றுக்கொள்ள கூடியதாக இருக்க வேண்டும்.

பயங்கரவாத பிரச்சினை தற்போது முடி யும் தறுவாயில் இருக்கின்றது என்றாலும் விடு தலைப்புலிகள் ஓர் பலமான அமைப்பு என்ப தனால் அவர்களை உடனடியாக அழிப்பது கடினமான விடயமாகும் என்றார். (ஓ-5)

# நாடாளுமன்றில் ஏழு சட்டமூலங்கள் நிறைவேற்றம்

(கொழும்பு)

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்ட ஏழு சட்டமூலங்கள் நிறை வேற்றப்பட்டுள்ளன. தேசிய இறைவரி சீர்தி ருத்தச் சட்டமூலம், பெறுமதி சேர்க்கப்பட்ட வரி சீர்திருத்தச் சட்ட மூலம், பொருளாதார சேவை நிதி சீர்திருத்தச் சட்டமூலம், நிதி சீரமைப்புச் சட்ட மூலங்கள் இரண்டு, உட்காவுகை வரி சீர் திருத்தச் சட்டமூலம், மற்றும் உற்பத்தி ஒழுங்கு முறை தொடர்பான சீர்திருத்தச் சட்டமூலம் என்பனவே இச் சட்டமூலங்களாகும்.

எனினும் இந்தச் சட்டமூலங்கள் நிறை வேற்றப்படுவதற்கு வாக்களிப்புகள் கோரப் படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சட்டமூலங்கள் பொது மக்களிற்கு சலுகைகளை வழங்கும் நோக்கிலேயே நிறை வேற்றப்பட்டதாக சபைத்தலைவர் நிமல் சிறிபாலடி சில்வா தெரிவித்துள்ளார். (6)

# நிஷாவினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவிகள்

கியுமெடிக்கா நிறுவனத்தால் நிஷா சூறா வளியினால் பாதிக்கப்பட்ட பருத்தித்துறை சக்கோட்டை பிரதேசத்திலுள்ள 300 குடும் பங்களுக்கு அந் நிறுவனத்தால் நிர்மாணிக் கப்பட்ட இலவச வைத்தியசாலையில் வைத்து உலருணவு மற்றும் புடவைகள் வழங்கப் படவுள்ளது.

இந்நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கியுமெடிக்கா நிறுவன பணிப்பாளர் ஷாம் இராஜசூரியர் தலைமை யில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத் தித்துறை பிரதேச செய லர் இ. வரதீஸ்வரன் கலந்து சிறப்பிக்கவுள் ளார். (6)

# தமிழீழத்தை பெற்றுக் கொடுப்பதற்கு ஐ.நா., இந்தியா, மேற்கத்தேய நாடுகள் முயற்சி

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபை இந்தியா மற்றும் மேற்கத்தேய நாடுகள் பிரபாகரனை மரணத் திலிருந்து காப்பாற்றி தமிழீழத்தை பெற்றுக் கொடுக்க மும்முரமாக செயல்பட்டு வரு கின்றன.

தனிநாட்டு கொள்கைக்கு துணைபோகக் கூடிய 13 ஆவது திருத்தச் சட்டம் உட்பட எவ் விதமான செயல்திட்டத்தையும் அரசாங்கம் முன்னெடுக்கக்கூடாது என்று தேசப்பற்று ள்ள தேசிய இயக்கம் அறிவித்துள்ளது.

பிரபாகரனையும் புலிகள் இயக்கத்தை யும் இராணுவ நடவடிக்கை மூலம் தோற் கடித்த பிறகு நாட்டை பொருளாதார ரீதியில் அபிவிருத்தி செய்வதே முதல் பணியாகும்.

அதன் பின்பே சிறுபான்மையினரின் பிரச்சி னைகள் தொடர்பாக ஆராயப்பட வேண்டும் எனவும் அந்த இயக்கம் தெரிவித்தது.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் விஷேட செய்தியாளர் மாநாடு கடந்த புதன் கிழமை பொரளையிலுள்ள தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைமையகத்தில் நடைபெற்ற போது அங்கு உரையாற்றிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேக ரவே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது, புலி களின் நோக்கம் நாட்டை இரண்டாகப் பிரிப் பது அல்ல முழு இலங்கையுமே கைப்பற்று வதே ஆகும். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வராவிட்டால் புலிகளின் நோக்கம் நடைபெற்றிருக்கக் கூடும்.

எனவே அரசாங்கம் யுத்தத்தின் இறுதி வெற்றி நிலையில் இருப்பதால் சர்வதேச கருத்துகளுக்கு செவிசாய்க்கத் தேவை யில்லை.

இலங்கை அரசாங்கத்திற்கு சர்வதேச நண்பர்களையும் எதிரிகளையும் இனங் கண்டு கொள்ள இக்காலகட்டம் வழிவகுத்து ள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு பிரிவும், மனித உரிமைகளின் பிரிவும் தொடர் ந்தும் இலங்கை அரசாங்கத்திற்கு பல்வேறு பிரச்சினைகளை கொடுத்த வண்ணமே உள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் பிரிவில் உள்ள நாடுகளில் மெக்ஷிக்கோவும், ஒஸ்ரியாவும் புலிகள் இயக்கத்திற்கு பல வகை களில் உதவி செய்து வருகின்றன என்றார். (ஓ-5)

# மூன்று நாட்கள் பயிற்சியளிக்கப்பட்ட ஊர்காவல் படையினரே யுத்தகளத்தில்

## ஜே.வி.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

கிராமங்களின் பாதுகாப்பிற்காக ஊர்காவல் படையில் இணைத்துக் கொள்ளப்பட்ட ஊர்காவல் படையினருக்கு மூன்று நாட்கள் பயிற்சியளிக்கப்பட்டதன் பின்னர் யுத்தத்திற்கு அனுப்பப்படுகின்றனர் என்று ஜே.வி.பி. யின் எம்.பி.யான ஜயந்த விஜேசேகர தெரிவித்தார். எமது இனத்தின் பெண்களை அன்று வல்லுறவிற்கு உட்படுத்தி மானபங்கப் படுத்திய இந்திய இராணுவத்தினர் இன்று புல்மோட்டையில் சீருடையில் சுற்றித் திரிகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையை சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

கிழக்கு மீட்கப்பட்டு விட்டதாக அரசு தம் பட்டம் அடிக்கின்றது. ஆனால், அங்குதான் கடத்தல், கப்பம், படுகொலை மற்றும் ஆயுத மீட்பு உள்ளிட்ட பாரிய குற்றச்செயல்கள் நாளுக்குநாள் அதிகரித்துச் செல்கின்றன. இது விடயத்தில் கிழக்கின் முதலமைச்சரும் மத்திய அரசும் மௌனம் காப்பது ஏன்? திருகோணமலையில் உள்ள ஆண்டான்குளம் சமுத்திரகம, உள்ளிட்ட கிராமங்களை அப்புறப்படுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தால் ஆயிரக் கணக்கான குடும்பங்கள் அவல நிலைக்குள் தள்ளப்படுகின்றன. திட்டமிடப்பட்ட இந்த சதித்திட்டங்கள் கிழக்கு மாகாண சபையின் தான் தோன்றித்தனமாகும்.

கிழக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள் அங்கு தான்தோன்றித் தனமாக நடந்து கொள்கின்றனர்.

திருமலை துறைமுகத்துக்கு அருகில் உள்ள பிரதேசங்களில் சுமார் ஆயிரத்து 450 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இதில் தமிழ்– சிங்கள – முஸ்லிம் இனத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கின்றனர்.

இதேபோல் ஆண்டான் குளத்தில் 125 குடும்பங்களை அப்புறப்படுத்தவும் கிழக்கு மாகாண சபை முயற்சித்து வருகின்றது. 30 வருடங்களுக்கும் மேலாக இங்கு வசித்து வரும் மக்களை அப்புறப்படுத்த நினைப்பதானது திட்டமிடப்பட்ட சதித்திட்டமாகும். இது கிழக்கு மாகாண சபையின் குறுகிய நோக்கங்களை நிறைவு செய்து கொள்ளவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

இந் நிலையில் கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் பிள்ளையான் தலைமையிலான குழுவினர் ஆயுதங்களை கையளித்து விட்டனர் என்று கூறுவதில் உண்மை இருக்க முடியாது . அது பொய்யாகும். பிள்ளையான் –கருணா ஆகியோரின் ஆயுத தாரிகள் அங்கு இருக்கின்றனர். இதன் பின்னணியிலேயே அங்கு கடத்தல்,கப்பம் ஆகிய குற்றச்செயல்கள் இடம்பெற்று வருகின்றன.

இது மட்டுமல்லாமல் பேக்கரியின் உணவுப்பொருட்களை உண்டவர்கள் பலியாகின்றனர். இதன் பின்னணியிலும் சதித்திட்டம் இருக்கின்றதா என்று சந்தேகிக்க தூண்டுகின்றது. இவ்விடயங்களுக்கு அரசாங்கம் பொறுப்புக்கூறவேண்டும்.

ஏனெனில் கிழக்கு மீட்கப்பட்டதாக அரசு கூறினாலும் அங்கு அரசில் அங்கம் வகிப்பவர்களாலும் இன்னும் ஏனையோரினாலும் பாரிய குற்றச்செயல்கள் அதிகரித்துச் செல்கின்றன. கிழக்கை மீட்ட அரசு அதனை பாதுகாப்பதில் கவனம் செலுத்த வேண்டும் எனக் கோருகிறேன்.

கிழக்கில் தினம் தினம் அசம்பாவிதங்கள் நடைபெறுகின்றன. ஆயுதங்கள், வெடி பொருட்கள் மீட்கப்படுகின்றன. இது தொடர்பில் கிழக்கு முதலமைச்சரும் மௌனமாக இருக்கிறன்றார். அதேபோல் அரசாங்கம் பிள்ளையானை ஒன்றும் கேட்கவில்லை. கிழக்கு முதலமைச்சரின் அலுவலகத்திற்குள் கொல்லப்பட்ட திருகோணமலை மாணவியின் உணவுப்பெட்டி மீட்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது.

இதேபோல் ,பயங்கரவாதம் காரணமாக திருகோணமலை சம்பூர் பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்த சுமார் 700பேர் இன்னும் அங்கு மீள் குடியேற்றப்படவில்லை இவ்விடயத்திலும் கூட அரசாங்கத்திடம் எந்த வித நடவடிக்கையும் இல்லை. அங்கு இந் திய நிறுவனங்களை நிறுவுவதற்கும் முயற் சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றார். (ஓ-6)

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் இறுதிப் பதவியும் பறிபோனது?

(கொழும்பு)

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதியும் , முன்னாள் பிரதமர்களின் புதல்வியுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் வகித்த இறுதிப்பதவியும் பறி போயுள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் பண்டார நாயக்க குடும்பத்தின் கோட்டையாகக் கருதப்பட்ட அத்தனகல ருவான்புர தொகுதி அமைப்பாளர் பதவியையும் சந்திரிகா இழந்துள்ளார் என இணையதளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஸ்தாபக உறுப்பினர்களில் முன்னோடியாக சந்திரிகாவின் தந்தை எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க கருதப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது.

ருவன்புர தொகுதி அமைப்பாளர் பதவியினை சந்திரிகா கடந்த 18வருட காலமாக வகித்து வந்தார். (ஓ-5)

# இராஜதந்திரிகளை சந்திக்க ஜனாதிபதி மஹிந்த ஏற்பாடு

(கொழும்பு)



கொழும்பில் உள்ள இணைத் தலைமை நாடுகளின் பிரதிநிதிகளை சந்தித்து தற்போதைய அரசியல் பொருளாதார நிலைமைகள் குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்துரையாடவுள்ளதாக கொழும்பில் இராஜ தந்திர தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் தற்போதைய நிலைமைகள் குறித்து வெளிநாடுகளில் சிலரால் தவறான பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் அது குறித்து தெளிவுபடுத்தும் நோக்கிலும் இந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது என்று வெளியுறவு அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அமெரிக்கா, பிரித்தானியா, நோர்வே, ஜேர்மன், அவுஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் தூதுவர்களே சந்திப்பில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதே வேளையில் இராஜதந்திரிகள் குழுவினை திருகோணமலைக்கு அழைத்துச் சென்று அங்கு இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டுவரும் இந்திய மருத்துவ சிகிச்சை முகாமையும் மற்றும் கிழக்கு மாகாணத்தின் தற்போதைய அரசியல் நிலைமைகளையும் காண்பிக்கவுள்ளதாக வெளியுறவு அமைச்சின் செயலாளர் பாலித கோஹன்ன தெரிவித்தார். (ச-5)



நவாலி மகாவித்தியாலய வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி ஆறுதிருமுருகன் மங்கள விளக்கேற்றுவதையும் பிரதம விருந்தினரான சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப்பணிப்பாளர் ந.கந்தசாமி, வலிகாமக் கல்வி வலயப்பிரதிக் கல்விப்பணிப்பாளர் சு.சுந்தரசிவம், வேலணைப்பிரதேச சபை உதவி ஆணையாளர் எஸ்.ரமேஸ், வித்தியாலய அதிபர் இரா.வசந்தகுமார் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்



யாழ்.மாவட்ட செயலகத்தினால் மாவட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையே நடாத்தப்பட்ட ஹொக்சிச் சுற்றுப்போட்டியில் யாழ். மாவட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்ட உடுவில் மத்தி விளையாட்டுக்கழக வீராங்கனைகளைப் படத்தில் காணலாம். (படம்:-கோபி)



வல்வை சிவகுரு வித்தியாலயத்தின் சாரணர் அணியுடன் வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதன், சாரணர் பொறுப்பாசிரியர் எஸ்.சோமசுந்தரன் ஆகியோர் நிற்பதைப் படத்தில் காணலாம். (அல்வாய் நிருபர்)



சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலய வருடாந்த இல்லமெய்வல்லு நர்போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் பாடசாலை அதிபரிடம் விளையாட்டு மைதான நன்கொடை பத்திரம் வழங்கப்படுவதை படத்தில் காணலாம்.

> ஒரு வௌவால் வீட்டிற்கு இன்னொரு வௌவால் வந்தால், அதுவும் தொங்கிக்கொண்டுதான் இருக்க வேண்டும்.
>
> ~ இலங்கை

வலம்புரி

## பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு நெஞ்சிலா தலையிலா சத்திரசிகிச்சை?

இலங்கைத் தமிழருக்கு அதிகாரப் பரவலாக்கல் வழங்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இணக்கம் தெரிவித்துள்ளதாக பிரதமர் மன்மோகன் சிங் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

கடந்த மாதம் 22ஆம் திகதி தமிழக முதல்வரினால் எழுதப்பட்ட கடிதத்திற்கு பதிலளிக்கும் முகமாகப் பிரதமர் மன்மோகன் சிங்கினால் எழுதப்பட்ட கடிதத்திலேயே தமிழ் மக்களுக்கு அதிகாரப் பரவலாக்கல் மூலம் உரிமை வழங்குவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உறுதியளித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருந்துக்குப் பணம் கேட்டால் இறுதிச் சடங்கிற்கு பணம் தருவதுபோல் மன்மோகன் சிங்கின் பதில் அமைந்துள்ளது.

அதாவது,வன்னியில் இடம்பெறும் உக்கிர மோதலால் அப்பகுதியில் அகப்பட்டுள்ள பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் வாழ்வா? சாவா? என்பது தெரியாமல் பரிதவிக்கின்றனர்.

இந்தப் போரில் ஆயிரக்கணக்கான மக்கள் பலியாகிவிட்டதுடன் பலர் அங்கவீனர்களாகி வாழ்வை தொலைத்த சோகத்தில் துவண்டு போயுள்ளனர்.

நிலைமை இதுவாக இருக்கும்போது, தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு மூலம் உரிமைகளை வழங்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இணக்கம் தெரிவித்துள்ளதாகப் பிரதமர் மன்மோகன் சிங் கூறியிருப்பதானது,

மன்மோகன் சிங்கிற்கு நெஞ்சிலா? தலையிலா? சத்திர சிகிச்சை நடந்ததென்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு மூலம் உரிமை வழங்கப்படுமென ஜனாதிபதி கூறியிருக்கலாம்.

இதுபோன்ற உறுதியுரைகள் இலங்கை அரசுக்குப் புதியவை அல்ல. அது மத்திய அரசுக்கும் கலைஞர் கருணாநிதிக்கும் நன்கு தெரியும்.

அதேநேரம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியவாறு, அதிகாரப் பரவலாக்கல் மூலம் தமிழர்களுக்கான உரிமையை வழங்காவிட்டால் இந்தியாவின் நடவடிக்கை என்னவாக இருக்கும்? இலங்கை மீது படையெடுப்பு நடத்தி உரிமையைப் பெற்றுக் கொடுக்குமா?

இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் ஒரு எல்லைக்கப்பால் தலையிட முடியாதென அமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறியிருக்கும் போது, வெறும் இணக்கப்பாடுகளையும், போலித்தனமான உறுதிமொழிகளையும் வைத்துக் கொண்டு பிரதமர் மன்மோகன் சிங், கலைஞர் கருணாநிதிக்கு கடிதம் எழுதியிருப்பது எல்லோரையும் முட்டாள்தனமாக்கும் செயலாகும்.

'உண்மையில் என்ன நடக்கிறதென்பதை பொறுத்திருந்து பார்ப்போம்' என்ற வாசகமும் மன்மோகன் சிங் எழுதிய கடிதத்தில் இடம்பெற்றுள்ளது.

ஆயிரக்கணக்கான மக்கள் பலியாகிக் கொண்டிருக்கும்போது என்ன நடக்கிறதென பொறுத்திருந்து பார்ப்போம் என பிரதமர் மன்மோகன் சிங் எழுதிய வாசகத்தை இம்சை அரசன் 23ஆம் புலிகேசியும் எழுதியிருக்க மாட்டான் அல்லவா?

# புதிய வகையில் சாரதி அனுமதிப்பத்திரம்; விண்ணப்பப் படிவங்கள் இன்று முதல்

## மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் அறிவிப்பு

(கொழும்பு)

ஸ்மாட் கார்ட் எனப்படும் புதிய வகையிலான சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பப்படிவங்கள் இன்று முதல் விநியோகிக்கப்படுவதாக மோட்டார் போக்கு வரத்து ஆணையாளர் பி.விஜயரத்தின அறிவித்துள்ளார்.

இப்புதிய வகை சாரதி அனுமதிப்பத்திரம் போன்று போலிச் சாரதி அனுமதிப்பத்திரங்களை தயாரிப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

புதிய முறைப் படி கனரக வாகனங்களைச் செலுத்துவதற்காக பெறப்படும் சாரதி அனுமதிப்பத்திரங்களை நான்கு ஆண்டுகளிலும் இல குரக வாகனங்களைச் செலுத்துவதற்காகப் பெறப்படும் சாரதி அனுமதிப்பத்திரங்களை 8 ஆண்டுகளிலும் புதிப்பிக்க வேண்டும் எனவும் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை புதிய வகைச் சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பப்படிவங்கள் இதுவரை தமக்கு நேற்று மாலை வரை கொழும்பு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் இருந்து அனுப்பி வைக்கப்படவில்லை எனவும் இன்று முதல் விநியோகிப்பது தொடர்பில் அறிவித்தல் எதுவும் கிடைக்கப்பெறவில்லை எனவும் யாழ். மோட்டார் போக்குவ்ரத்து ஆணையாளர் வ.பத்மநாதன் தெரிவித்தார்.

(5-6)

# அரசியல் தீர்வே இறுதியானது என்பதால் தமிழ் தேசிய கூட்டமைப்புடன் பேச்சு

## ஊடகத்துறை அமைச்சர் யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் தேசிய பிரச்சினைக்கு யுத்தம் இறுதித் தீர்வாகாது. அரசியல் தீர்வே இறுதியானதும் உறுதியானதுமாகும். இதனால் தான் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது. இது அரசின் கடப்பாடாகும் என்று தகவல் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபயவர்த்தன தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமை அமைப்பின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் அறிக்கையில், விடுதலைப் புலிகளின் குரலே அதிகம் பிரதிபலித்துள்ளது என்றும் அவர் கூறினார். அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து தெரிவித்தபோதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

இங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

சர்வதேச நாடுகளின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து தமிழ் தேசிய கூட்டமைப்புடன் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு முன்வரவில்லை.

யுத்தத்தால் பயங்கரவாதத்தை இல்லா தொழிக்க முடியும் ஆனால் தேசிய பிரச்சினைக்கு யுத்தம் மட்டும் தீர்வாக அமையாது பிரச்சினைக்கு இறுதித் தீர்வு அரசியல் தீர்வேயாகும்.

இதனை அரசாங்கம் உணர்ந்துள்ளது. எனவே அரசாங்கத்தடன் இணைந்துள்ள கட்சிகளுடன் மட்டுமின்றி, பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டுமென்று தீர்மானத்தை எடுத்தோம். துப்பாக்கிகளுக்கு மத்தியில் தேர்தலில் போட்டியிட்டு மக்கள் வாக்குகளை பெற்று பாராளுமன்றம் வந்தார்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பினர். ஒருவர், இருவர் அல்ல 22 பேர் இருக்கின்றனர்.

எனவே வடபகுதி மீட்கப்பட்டவுடன் மிக விரைவில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் நடத்தப்படும். நாட்டின் ஏனைய பிரதேசங்களை விட வடபகுதியின் அபிவிருத்திகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளையின் அறிக்கையில் புலிகளின் குரலே அதிகமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. எதிராக வெறுமனே சிறுவிடயங்களே கூறப்பட்டுள்ளது.

யுத்தம் இடம்பெறும் பிரதேசங்களுக்கு நேரில் சென்று பார்வையிட வேண்டுமென்ற ஐரோப்பிய ஒன்றியத்தின் கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

விடுதலைப் புலிகள் இன்று சர்வதேச ரீதியதக அரசாங்கத்திற்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுத்து பொய் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

யுத்த சூன்ய பிரதேசத்தில் மக்கள் மீது தாக்குதல் நடத்துவதாகவும் சூட்சுமமான பிரசாரங்களே முன்னெடுக்கப்படுகின்றன.

இதனால் அரசாங்கம் அனைத்து நடவடிக்கைகளிலும் நிதானத்தை கடைப்பிடித்து வருகிறது.

அமெரிக்க செனட்சபை உறுப்பினர் ஜோன் கெலி யுத்தத்தில் சிக்கியுள்ள மக்களை பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையெனத் தெரிவித்திருப்பது ஆச்சரியமளிக்கின்றது. இதனை அரசாங்கம் புரிந்து கொண்டுள்ளது என்றார்.

(ஓ-5)

# வெள்ளி நற்சிந்தனை 64

# பக்தியின் மொழி தமிழ்

நறுமணம் எம்மைக் கவரும் தன்மையது. ஐம்பொறிகளுள் ஒன்றான மூக்கு நறுமணத்தை உடனடியாக எமக்கு உணர்த்தும். நறுமணத்தை வெளிப்படுத்தும் நல்ல மலர்கள் முற்காலத்தில் மக்கள் வாழ்வியலில் பெரிதும் தொடர்புபட்டிருந்தன. நாளாந்தம் நடைமுறைகளிலும் சிறப்பு நிகழ்வுகளிலும் வழிபாட்டு நடைமுறைகளிலும் மலர்களின் பங்களிப்பு இன்றியமையாததாக இருந்தது. இயற்கையின் இனிய கொடையான மலர்களைப் பேணும் மலர் பண்பாடு ஒன்று மனித வாழ்வியலோடு நெருங்கிப்பிணைந்திருந்தது.

இன்று இப் பண்பாடு நடைமுறைகளில் மலினப்பட்டு வருகின்றது. குறிப்பாக வீட்டுச்சூழலிலும் பொது இடங்களிலும் நறுமலர்ச் செடிகள் புறந்தள்ளப்பட்டு செயற்கை மலர்கள் பேணப்படுகின்றன. மேலை நாட்டார் கொணர்ந்த இலைச் செடிகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

முன்னோர் வாழ்வியலில் மலர் முக்கிய பங்கேற்றிருந்தது. நறுமணம் இயற்கை நிலையில் சூழலைத் தூய்மைப் படுத்தியது. அழகுபடுத்தும் நிலையில் பல்வேறு நிற மலர்கள் பயன்படுத்தப்பட்டன. வழிபாட்டு நடைமுறையில் நறுமணமான மலர்கள் பயன்பட்டவாற்றை தேவாரப் பாடல்கள் பதிவு செய்துள்ளன. நாயன்மார்களது பாடல்களில் மலர்ப் பண்பாடு வழிபாட்டு நிலையில் பேணப்பட்டமை விரிவாகவே பேசப்பட்டுள்ளது.

திருக்கோயில் சூழலில் நறுமலர்த் தோட்டங்கள் அமைந்திருந்தன. ஆற்றின் கரையில் அமைந்த திருக்கோயில்களில் நீர்வளம் மலிந்த விளை நிலங்களில் மலர்க்காடுகள் இயற்கையாகவே இணைந்திருந்தன. இயற்கையான மலர்களின் நிறமும் ஒழுங்கு நிலையும் மனிதனைக் கவர அவன் அவற்றைப் பேணமுற்பட்டான். பொன்னியாற்றங்கரையில் அமைந்த திருக்கொட்டையூர் தலத்தைப் பாடிய அடியவரான நாவுக்கரசர் அச் சூழலைப் பாடலில் பதிவு செய்துள்ளார். நறுமணம் வீசும்--கிறார். கோயிலின் சூழலிலிருந்த குரவ மரங்கள் நிறைந்த பொழிலின் அமைப்பையும் பாடலில் குறிப்பிடுகிறார். இறைவனுடைய அருட்சிறப்புகளை எல்லாம் நினைப்பதற்கு நறுமணம் வீசும் மலர்களே வழிகாட்டும் அற்புதமான அனுபவம் அவர் பாடிய பதிகத்திலே பரவியுள்ளது. பொன்னி நதியின் நீர்வளமே அதற்கு முக்கிய காரணமாக இருப்பதையும் உணர்கிறார். "சலம்பூவொடுதூபம்' மறந்தறியேன் என இறைவனிடம் முறையிடும் நாவுக்கரசர் மலர்ப் பண்பாட்டை மனித வாழ்வியலில் நிலைபெறத் தொண்டு செய்தவர். தமக்குப் பின்னே எல்லோரும் இப்பண்பாட்டைப் பேணுவது நன்று என நினைத்தவர். எல்லோரும் இறைவனுக்கு மடையிடும் எளிமையான பொருள் மலர்களே என்பதை உணர்த்தியவர். எம்மையும் அப்பணி செய்யத் தூண்டுகிறார்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

" விரை கமழு மலர்க்கொன்றைத் தாரான் கண்டாய் வேதங்கள்
தொழ நின்ற நாதன் கண்டாய்
அரையதனிற் புள்ளியதளுடையான் கண்டா யழலாடி கண்டா
யழகன் கண்டாய்
வருதிரை நீர்ப்பொன்னி வலஞ் சூழியான் கண்டாய்
வஞ்சமனர்த்தவர்க் கரிய மைந்தன் கண்டாய்
குரவமரும் பொழில் புடைசூழ் கொட்டையூரிற் கோடீச்
சரத்துறையுங்கோமான்றானே"

# உலகின் மிக வயதான பெண்மணி வடகஜகஸ்தானில் கண்டுபிடிப்பு


சஹான் டொஸோவா




உலக சாதனைப் பதிவுகளுக்குத் தப்பி 130 வயதான பெண்மணியொருவர் வட கஜகஸ்தானிலுள்ள கரகன்டா எனும் இடத்தில் வாழ்வது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவரது 130 ஆவது பிறந்தநாள் இன்று வெள்ளிக் கிழமையாகும்.

தற்போது உலக கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் உலகின் வயதான நகராக பதிவாகியுள்ள அமெரிக்கரான எட்னா பார்க்கருக்கு வயது 114 ஆகும்.

இந்நிலையில் எட்னா பார்க்கரை விட 16 வயது மூத்தவரான சஹான் டொஸோவா என்ற இந்தப் பெண்மணி, இதுவரை காலமும் தனது முதிர்ந்த வயது மற்றவர்களின் கண்களை உறுத்தாத வண்ணம் வாழ்ந்தது கரகன்டா நகர அதிகாரிகளுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சனத்தொகை கணக்கெடுப்பு ஒன்றுக்காக வீடு வீடாகச் சென்று தகவல் திரட்டுகையிலேயே இத்தகைய முதிர்ந்த வயதுடைய பெண்மணி யொருவர் தமது நாட்டில் வாழும் இரகசியம் அதிகாரிகளுக்கு தெரிய வந்துள்ளது.

சஹான் டோஸோவாவின் கடவுச்சீட்டின் பிரகாரம், அவர் 1879 ஆம் ஆண்டு மார்ச் 27 ஆம் திகதி பிறந்துள்ளார். விஞ்ஞானி தோமஸ் அல்வா எடிசன் மின்விளக்கை கண்டுபிடித்த ஆண்டு அது என்பது குறிப்பிடத்தக்கது.

தனது நீண்ட ஆயுட்கால இரகசியம் குறித்து சஹான் டொஸோவோ விபரிக்கையில்,

தான் ஒருபோதும் மருத்துவரிடம் சிகிச்சைக்காக சென்றதோ இனிப்புப் பண்டங்களை சுவைத்ததோ இல்லையென்று தெரிவித்தார்.

சஹான் டொஸோவாவுடன் வாழும் அவரது பேரப்பிள்ளைகளில் ஒருவரான கோகர் கனீவா (42 வயது) விபரிக்கையில், ''எனது பாட்டி மிகவும் மகிழ்ச்சிகரமான பெண்மணி, எப்போதும் சிரித்தவாறும் நல்ல மனநிலையிலும் இருப்பதே அவரது நீண்ட ஆயுளின் இரகசியம் என நாம் நினைக்கிறோம்'' என்று தெரிவித்தார். (ஓ-5)

# செவ்வாயின் மேற்பரப்பிற்கு கீழ் திரவ வழிவில் உப்பு நீர்

(அமெரிக்கா)

செவ்வாய்க் கிரகத்தின் மேற்பரப்பின் கீழ் திரவ வடிவில் உப்பு நீர் இருப்பதற்கான சாத்தியம் உள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

செவ்வாய்க் கிரகத்தில் நிலவும் குறைந்த வெப்ப நிலைகள் மற்றும் வளி மண்டல அமுத்தம் என்பன காரணமாக செவ்வாயில் பனிக்கட்டி மற்றும் நீராவி உருவில் நீர் இருப்பதற்கு வாய்ப்புள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் ஏற்கனவே தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும் செவ்வாய்க் கிரகத்தில் தரையிறங்கியுள்ள நாசாவின் பீனிக்ஸ் விண்கலம் மூலம் பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் அக்கிரகத்தின் மண்ணில் பேர்குளோரைட் உப்பு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இந்த உப்பு - 70 பாகை செல்சியஸ் வெப்ப நிலையில் நீரைத் திரவமாகப் பேணக் கூடியது.

இந்த விஞ்ஞானிகளின் ஆய்வு முடிவுகள் அமரிக்க டெக்ஸாஸ் மாநிலத்திலுள்ள வூட்லாண்டில் நடைபெற்ற 40 ஆவது சுதந்திர மற்றும் கோளியல் விஞ்ஞான மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டன.

பீனிக்ஸ் விண்கலமானது கடந்த ஆண்டு மே மாதம் 25 ஆம் திகதி செவ்வாய்க் கிரகத்தின் வட பகுதியில் தரையிறக்கப்பட்டது.

பூமியில் பேர்குளோரைட் அமிலத்திலிருந்த பெறப்படும் பேர்குளோரைட் உப்பானது ஏவுகணைக்கான திண்ம எரிபொருளாகவும் வாண வேடிக்கைகளுக்கான உள்ளீடாகவும் பயன்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி ஆய்வுக்கு தலைமை தாங்கிய கலிபோர்ணியாவின் பஸடேனா நகரிலுள்ள நாசா ஆய்வுகூடத்தைச் சேர்ந்த கலாநிதி மைக் ஹெச்ட் விபரிக்கையில்,

நாசாவில் பொய்கைகள் இருப்பதாக நாம் கருதவில்லை.

ஆனால், இந்த பேர்குளோரைட் உப்புகளும் அக் கிரகத்தில் நிலவும் காற்றமுத்த நிலையும் மேற்பரப்புக்குக் கீழ் திரவ வடிவத்தில் உப்புநீர் காணப்படுவதற்கான சாத்தியக் கூறுகளை எடுத்துக்காட்டுவதாக உள்ளது என்று தெரிவித்தார். (ஓ-5)

# குழந்தையின் உயிரைக் காப்பாற்றிய கிளிக்கு விருது வழங்கி கௌரவம்

(அமெரிக்கா)

கீச்சிட்டு எச்சரிக்கை செய்து மூச்சுத்திணறி உயிருக்காகப் போராடிய பெண் குழந்தையொன்றை காப்பாற்றிய கிளியொன்றுக்கு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட சம்பவம் அமெரிக்க கொலராடோ மாநிலத்திலுள்ள டென்வர் நகரில் இடம் பெற்றுள்ளது.



உள்ளூர் செஞ்சிலுவைச் சங்கத்தின் 'மிருக உயிர்க் காப்பாளர்' என்ற விருது வில்லி என்ற இந்தக் கிளிக்கு வழங்கப்பட்டது.

'காலை உணவு' பிரசார நிகழ்ச்சியொன்றின் போது இடம்பெற்ற இந்த விருது வழங்கும் வைபவத்தில், கொலராடோ மாநில ஆளுநர் பில் ரிட்டர் மற்றும் டென்வர் நகர மேயர் ஜோன் ஹக்கென் லூப்பர் ஆகியோர் ஆஜரா கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கிளியின் உரிமையாளரான மொஹான் ஹவார்ட் பிள்ளைகள் பராமரிப்பு நிலையமொன்றை நடத்தி வந்தார்.

சம்பவதினம் ஹன்னா என்ற மேற்படி குழந்தைக்கு காலை உணவு தொண்டையில் சிக்கி மூச்சுத்திணறியதுடன் அக்குழந்தையின் உடலும் நீல நிறமாக மாற ஆரம்பித்துள்ளது.

இதனை அவதானித்த கிளியானது "மமா பேபி' என தனது இரு இறக்கை களையும் அடித்து கீச்சிட்டுள்ளது.

இதனையடுத்து பராமரிப்பாளரான மொஹான் ஹவார்ட் குழந்தை உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பதை அவதானித்து உடனடி முதலுதவி சிகிச்சையை மேற்கொண்டதுடன் குழந்தையை மருத்துவமனையில் அனுமதித்தார்.

கிளிமட்டும் உரிய தருணத்தில் எச்சரிக்கை செய்யாது இருந்திருக்குமானால், சிறுமியின் உயிரைக் காப்பாற்றியிருக்க முடியாது என மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். (ஓ-5)

# முஷாரப்பை ராஜதுரோகியாக அறிவிக்க வேண்டும்

## பாக். மேல்நீதிமன்றில் வழக்கு தாக்கல்

(இஸ்லாமாபாத்)

அவசர நிலையை அறிவித்து, தலைமை நீதிபதியை பதவியிலிருந்து நீக்கிய முஷாரப்பை ராஜ துரோகியாக அறிவிக்க வேண்டும் என பாகிஸ்தான் மேல்நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. லாகூரில் உள்ள மேல் நீதிமன்ற கிளையில் பரூக் ரசன் என்பவர் மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

2007 ஆம் ஆண்டு நவம்பர் 3ஆம் திகதி பாகிஸ்தானில் அவசர நிலையை அறிவித்து, தலைமை நீதிபதியை நீக்கினார் அதிபர் முஷாரப். அரசியல் சட்டத்துக்கு முரணாக செயல்பட்ட முஷாரப் மீது 1973 ஆம் ஆண்டிலுள்ள ராஜதுரோக சட்டப்படி குற்றம் சுமத்தப்பட வேண்டும். அவர் நாட்டை விட்டு வெளியேறாதபடி பாதுகாப்பு செயலருக்கு உத்தர விட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது. (ஓ-5)

# சுற்றுச்சூழல் மாசுபடுத்தும் நாடுகள் பட்டியலில் இந்தியாவை சேர்ப்பதற்கு எதிர்ப்பு

(வோஷிங்டன்)

காபனீரொட்சைட் அதிகளவில் வெளியேற்றி, சுற்றுச் சூழலை மாசுபடுத்தும் நாடு கள் பட்டியலில்இந்தியாவைச் சேர்க்க முற் படுவது சரியல்ல என, இந்தியா எதிர்ப்பு தெரி வித்துள்ளது. பிரதமர்மன்மோகன்சிங்கின் விசேஷ தூதால் ஷியாம் சரண், நான்கு நாள் பயணமாக அமெரிக்கா சென்றுள்ளார். வோஷிங்டனில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றும் போது,

உலகளவில் சமீபத்தில் சேகரிக்கப்பட்ட விவரங்களில் இருந்து அமெரிக்காவும், சீனாவும் அதிகளவில், அதாவது 20சதவீத அளவுக்கு காபனீரொட்சைட்டை வெளியேற்றி சுற்றுச் சூழலை மாசுபடுத்துவது தெரிய வந்துள்ளது. இந்தியாவில் 100 கோடி மக்கள் தொகை இருந்தும், 4சதவீத அளவுக்கே காபனீரொட்சைட் வெளியேற்றப்படுகிறது. இருந் தும், காபனீரொட்சைட்டை அதிகளவில் வெளியேற்றும் நாடுகள் பட்டியலில், இந்தி யாவை சேர்க்க முற்படுவது சரியல்ல. அது நியாய மற்ற செயல்.

அதேநேரத்தில், இந்த விஷயத்தில் வளர்ந்த நாடுகள் பல, தவறான தகவலை வெளியிட்டு தங்களைக் காத்துக்கொள்ள முற்படுகின்றன. காலநிலை மாற்றம் பெரிய சவாலாக உருவெடுத்துள்ளது. இதை எதிர்கொள்ள, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி விவகாரத்தில் இந்தியாவும், அமெரிக்காவும் இணைந்து செயல்பட வேண்டும். அணுசக்தி ஒப்பந்த விவகாரத்துக்குப் பின், இதுபோன்ற ஒப்பந்தம் ஏற்பட வேண்டியது அவசியம் என்றார். (ஓ-6-5)

# எமது கூட்டணி ஆட்சியமைத்தால் இலங்கைப் பிரச்சினைக்கு நிரந்தரதீர்வு

## சரத்குமார் தெரிவிப்பு

பாரதீய ஜனதாவுடன் கூட்டணி அமைத்து தேர்தலில் போட்டியிட சமத்துவ மக்கள் கட்சி முடிவு செய்துள்ளதாகவும் அது தொடர்பாக அந்தக் கட்சியுடன் 2 கட்டப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாகவும் அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் தலைவர் சரத்குமார் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது, ஒரு வாரத்துக்குள் இறுதிக் கட்டப் பேச்சுவார்த்தை நடத்தி எங்களுக்கு எத்தனை தொகுதிகள், எந்தத் தொகுதிகள் என்று முடிவு செய்யப்படும்.

தேர்தலில் எந்தச் சின்னத்தில் போட்டி என்பது குறித்து இன்னும் முடிவுசெய்யவில்லை. எங்கள் கூட்டணி வெற்றிபெற்று மத்தியில் ஆட்சி அமைத்தால் இலங்கை தமிழர் பிரச்சினையை நிச்சயம் நிரந்தரமாக தீர்த்துவைப்போம் என்றார். (ஓ-5)

# பிரதமர் பொய் சொல்வது அவமானமாக இருக்கிறது

## வைகோ தெரிவிப்பு



டெல்லியில் உள்ள ஜெர்மன் தூதரகத்தின் அரசியல் பிரிவு கவுன்சிலர் எரிகோசைல், சுவீடன் நாட்டு தூதரகத்தின் அரசியல் பிரிவை கவனிக்கும் இரண்டாவது நிலை செயலாளர் ஆஸ்கார் ஸ்கைட்டர் ஆகியோர் இலங்கை தமிழர் பிரச்சினை குறித்து மதிமுக பொதுச் செயலாளர் வைகோவை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார்.

இச் சந்திப்புக்குப் பின் செய்தியாளர்களை சந்தித்த வைகோ கூறியதாவது,

இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான அனைத்து நடவடிக்கைகளையும் ராஜபக்ஷ எடுத்து வருகிறார். இதைக் கண்டித்து ஹிலாரி கிளிண்டன் கண்டனம் தெரிவித்தார். ஆனால் இலங்கை அரசு அவரின் கண்டனத்தை மறுத்துவிட்டது.

வாஜ்பாய் அரசு இருந்தபோது இலங்கைக்கு ஆயுதங்களையோ, இராணுவத்தையோ அனுப்பவில்லை. தொடர்ந்து 5 ஆண்டு காலம் இந்த நிலை நீடித்தது.

ஆனால் காங்கிரஸ் தலைமையிலான அரசு வந்தபோது தான் இலங்கைக்கு இராணுவ உதவிகள் வழங்கப்பட்டன. காங்கிரஸ் அரசு தமிழ் மக்களுக்கு கெடுதல் விளைவித்துள்ளது. அவர்களின் இந்த துரோகம் தேர்தலில் முக்கிய பிரச்சினையாக இருக்கும்.

போரை நிறுத்துங்கள் என்று இதுவரை இலங்கை அதிபர் ராஜபக்ஷ விடம் பிரதமர் மன்மோகன்சிங் வலியுறுத்தியது இல்லை. ஆனால் இதுகுறித்து பிரதமர் பொய் சொல்வது அவமானமாக இருக்கிறது.

இலங்கையில் செத்து விழும் ஒவ்வொரு தமிழனின் சாவுக்கும் இந்திய அரசு தான் பொறுப்பு ஏற்க வேண்டும்.

போர் நிறுத்தம் செய்யுங்கள் என்று இந்திய அரசு எங்களை வற்புறுத்தவில்லை என்று இலங்கை மந்திரி கூறியிருக்கிறார்.


ஆனால் போரை நிறுத்த இலங்கை அரசுடன் பேசி வருவதாக பிரதமர் கூறியிருக்கிறார். ஆனால் இந்த நிமிடம் வரை இலங்கையில் போர் நிறுத்தப்படவில்லை என்றார். (ஓ-5)

# சரிவு கண்ட நியூசிலாந்து அணியை சதம் அடித்து மீட்டனர் ரெயிலர், ரைடர்

(நேபியர்)

ரெய்லர், ரைடரின் சிறப்பான சதத்தின் மூலம் நியூசிலாந்து அணி நேற்றைய முதல்நாள் ஆட்ட நேரமுடிவில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களையிழந்து 351 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நியூசிலாந்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 2 இருபது-20, 5 ஒரு நாள் மற்றும் 3



டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது.

இதில் இருபது-20 தொடரை நியூசிலாந்து அணி 2:0 என்ற கணக்கிலும் ஒரு நாள் தொடரை இந்திய அணி 3:1 என்ற கணக்கிலும் கைப்பற்றினர்.

தொடர்ந்து நடைபெற்ற முதலாவது டெஸ்டில் இந்திய அணி வெற்றி பெற்று தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ள நிலையில் இரண்டாவது டெஸ்ட் நேற்று நேபியரில் ஆரம்பமானது.

இப்போட்டியில் இந்திய அணித் தலைவர் தோனி பூரண உடல்தகுதி இன்மையால் விளையாடாத நிலையில் அணித்தலைவர் பொறுப்பு சேவாக்கிற்கு வழங்கப்பட்டது.

இதில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி அளித்தது.

ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான மைக்லன்தோஸ் (12), குப்தில் (8) மற்றும் ஹவ் (0) என்ற ஓட்டத்துடன் அடுத்தடுத்து ஆட்டமிழக்க நியூசிலாந்து அணி 23 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 3 விக்கெட்டுக்களை இழந்து திணறியது.

எனினும் 4ஆவது விக்கெட்டுக்காகஇணைத்த ரெய்லர்-ரைடர் ஜோடி சிறப்பாக துடுப்பெடுத்தாடி அணியை சரிவில்இருந்துமீட்டுபலமானநிலைக்கு தூக்கி நிறுத்தினர்.

இதில் ரெயிலர் 151ஆவது பந்திலும் ரைடர் 147 பந்திலும் சதத்தினைப் பூர்த்தி செய்து அசத்த, நியூசிலாந்து அணி 275 ஓட்டங்களை கடந்தது.

எனினும் இந்த ஜோடி 4ஆவது விக்கெட்டுக்காக 271 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்தபோது அதிரடியாக துடுப்பெடுத்தாடிய ரெயிலர் 204 பந்துகளில் (26 பவுண்டரிகள் ஒரு சிக்சர் உட்பட) 151 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய பிராவ்க்ளின் 5ஆவது விக்கெட்டுக்காக ரைடருடன் சிறப்பான இணைப்பை வழங்க நியூசிலாந்து அணி நேற்றைய முதல் நாள் ஆட்டநேர முடிவில் அதன் முதலாவது இன்னிங்சில் 4 விக்கெட்டுக்களை இழந்து 351 ஓட்டங்களை எடுத்திருந்தது. இதில் ரைடர் 137 ஓட்டங்களை யும் பிராங்ளின் 26 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். பந்து வீச்சில் சகீர்கான் 2 விக் கெட்டுக்களையும் இஷாந்த் சர்மா, ஹர்பஜன் சிங் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். 2ஆம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# பாகிஸ்தான் வீரர்களுக்கு வாய்ப்புக் கிடைக்குமா?

(கராச்சி)

இந்தியாவுக்கு வெளியே, தென்னாபிரிக்காவில் போட்டிகள் நடப்பதால் பாகிஸ்தான் வீரர்களுக்கு அனுமதி அளிக்கலாம் என சில ஐ.பி.எல். அணிகளின் உரிமையாளர்கள் விரும்புவதாக தெரிகிறது.

மும்மை தாக்குதல் காரணமாக இந்த ஆண்டு ஐ.பி.எல். போட்டிகளில் கலந்து கொள்ளும் உமர் குல், காம்ரன் அக்மல், சொகைல் தான்வீர், மிஸ்பா உல் ஹக் உள்ளிட்ட வீரர்களின் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் சார்பில் உமர் குல் வேண்டும் என ஏற்கனவே கேட்கப்பட்டுள்ளது. ராஜஸ்தான் றோயல்ஸ் அணியில் சொகைல் தான்வீர் மீது குறிவைத்துள்ளனர்.

ஆனால் ஐ.பி.எல். தலைவர் லலித் மோடி கூறுகையில், இந்த ஆண்டு பாகிஸ்தான் வீரர்கள் கலந்து கொள்ள மாட்டார்கள் என்று தெரிவித்து இருந்தார்.

இது குறித்து பாகிஸ்தான் மூத்த வீரர் ஒருவர் கூறுகையில், அதிகமான பணம் கிடைக்கும் இந்த தொடரில் வாய்ப்புக்காக காத்திருக்கிறோம். ஆனால் இந்தியாவுக்கு வெளியில் தொடர் நடக்கும் போது ஏன் எங்களை அனுமதிக்க மறுக்கிறார்கள் என தெரியவில்லை என்றார்.

# கங்குலிக்கு அடிமேல் அடி

# கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கு சுழற்சிமுறையில் 4 அணித்தலைவர்கள்

## பயிற்றுவிப்பாளர் புக்கானன் புதுமை

(கொல்கத்தா)

இந்தியன் பிரிமியர் லீக் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் தலைவர் பதவி சௌரவ் கங்குலியிடமிருந்து பகிர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

ஐ.பி.எல். சார்பில் 2 ஆவது இருபது-20 கிரிக்கெட் தொடர் தென்னாபிரிக்காவில் எதிர் வரும் ஏப்பிரல் 18 ஆம் திகதி ஆரம்பமாகிறது.

இத்தொடரில் பங்கேற்கும் 8 அணிகளுள் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் ஒன்று.

இதன் உரிமையாளராக பாலிவூட் நடிகர் ஷாருக்கான் உள்ளார். அணியின் தலைவராக சௌரவ் கங்குலி இருந்தார். கங்குலிக்கும், அணியின் பயிற்சியாளரான அவுஸ்திரேலியாவின் ஜோன் புக்கானனுக்கும் சமீபத்தில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

அணித்தலைவர் பதவியில் இருந்து கங்குலியை நீக்க வேண்டும் என புக்கானன் விரும்புவதாக செய்திகள் வெளியாகின.

**சுழற்சி முறை**

இந்நிலையில் நேற்று முன்தினம் கொல் கத்தாவில் ஜோன் புக்கானன், கங்குலி இருவரும் பத்திரிகையாளர்களை சந்தித்து பேட்டி அளித்தனர். அப்போது புக்கானன் கூறுகையில்,

அணியில் கங்குலி, மெக்கலம் (நியூசிலாந்து), ஹயில் (மேற்கிந்தியத்தீவுக்ள்), ஹாட்ஜ் (ஆஸி.) என



நான்கு அணித்தலைவர்கள் உள்ளனர்.

இந்நிலையில் அணிக்கு நிரந்தர அணித்தலைவர் தேவையில்லை என முடிவு செய்தேன்.

இது குறித்து நானும் அணித் தலைவர் கங்குலியிடம் ஆலோசனை நடத்தினேன். இனி ஒவ்வொரு போட்டிக்கும் சுழற்சி முறையில் ஒருவர் அணியை வழிநடத்துவார் என்றார்.

கங்குலிக்கும், தனக்கும் மோதல் இல்லை என்பதை விளக்கும் விதமாக பேட்டியின் இடையே, கங்குலி கொல்கத்தாவின் ராஜா என அவரை புகழ்ந்தார் புக்கானன்.

**கங்குலி பெருந்தன்மை**

புக்கானன் முடிவை பெருந்தன்மையுடன் ஏற்றுக் கொண்டார் கங்குலி. இது குறித்து அவர் கூறுகையில்; அணியின் பயிற்சியாளர் புக்கானன் முடிவு எனக்கு வருத்தம் அளிக்கவில்லை.

சுழற்சி முறையில் அணித்தலைவர்களைத் தேர்வு செய்வது என்பது புதிய முறை. புக்கானன் அம்முடிவை எடுத்து உள்ளார். இது அவரது விருப்பம் என்னை பொறுத்தவரை தொடரில் சிறப்பாக ஆடி ஓட்டங்கள் குவிக்க வேண்டும் என்பதே என்றார்.

# சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்... 45





அவுஸ்திரேலியா சென்ற இலங்கை அணி மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் முதலாவது டெஸ்டில் விளையாடியது.

1995 ஆம் ஆண்டு டிசம்பர் 8ஆம் திகதி பேர்த்தில் ஆரம்பமான இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 251 ஓட்டங்களை எடுத்தது.

இதில் முரளித்ரன் துடுப்பெடுத்தாட களமிறங்கிய போதும் பந்துவீச்சு எதனையும் எதிர்கொள்ளாமல் ஆட்டம் இழக்காமல் மைதானம் திரும்பினார்.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி ஸ்லேற்றரின் இரட்டைச்சதத்தின் மூலம் 5 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 617 ஓட்டங்களை குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதில் முரளிதரன் 54 ஓவர்கள் பந்துவீசி 3 ஓட்டம் அற்ற ஓவர்கள் உட்பட 224 ஓட்டங்களைக் கொடுத்து ஸ்லேற்றர் (219), பூன் (13) ஆகியோரை ஆட்டமிழப்புசெய்து இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.


தொடர்ந்து இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்க 367 ஓட்டங்களை எடுக்க வேண்டும் என்ற கட்டாயத்தில் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 330 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களை யும் இழந்து இன்னிங்ஸ் மற்றும் 36 ஓட்டங்கள் வித் தியாசத்தில் தோல்வியடைந்தது. இதில் முரளிதரன் ஆட் டமிழக்காமல் 3 ஓட்டங்களை எடுத்தார்.

முதலாவது டெஸ்ட் போட்டியைத் தொடர்ந்து பென்சன் அன்ட் ஹெட்ஜ்ஸ் உலகத் தொடரில் அவுஸ்திரேலிய, மேற்கிந்தியதீவுகள் மற்றும் இலங்கை அணிகள் மோதின.

இத் தொடரின் முதலாவது போட்டியில் இலங்கை மேற்கிந்திய தீவுகள் மோதின. 1995ஆம் ஆண்டு டிசம்பர் 15ஆம் திகதி அடிலெய்ட்டில் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.


(பயணிக்கும்)

# எண் விளையாட்டு-50



***போட்டிவிதிகள்:*** மேலிருந்து கீழ் தொடங்கும் வெள்ளைக் கட்டங்ளில் நிரப்பப்படும்எண்களின் கூட்டுத் தொகை, கட்டங்களின் மேல்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணுக்கு சமமாகவர வேண்டும். இடமிருந்து வலமாக செல்லும் கட்டங்களுக்கும் இதே விதிதான். அக்கட்டங்களுக்கான கூட்டுத் தொகை இடப் புறம் கொடுக்கப்பட்டுள்ளது. 1 முதல் 9 வரையான எண்களை பயன் படுத்த வேண்டும். ஆனால் ஒருவரிசையில் பயன்படுத்திய எண் திரும்பவரக் கூடாது.

## நேற்றைய பகுதிக்கான விடை



மாநகர சபை, யாழ்ப்பாணம்,



## ஐ.நா. பாதுகாப்புச்...

பில் ரம்மெல் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சர் இலங்கை நிலைவரம் குறித்து ஐ.நா.பாதுகாப்புச் சபையுடனும் பொதுநலவாயத்திலுள்ள எமது சகாக்களுடனும் தொடர்ந்து பேச்சுக்களை மேற்கொண்டு வருகிறார்.

எமது வெளிவிவகார அமைச்சர் இந்த சபையில் பல தடவைகள் குறிப்பிட்டமை போன்று இலங்கையின் வட பகுதியில் மோதலில் சிக்கியுள்ள மக்களின் பாதுகாப்பே எமது முன்னுரிமையாகவுள்ளது.

இந்த நிலைமைக்கு முடிபு காண்பதற்கு இலங்கை அரசுடனும், சர்வதேச சகாக்களுடனும் தொடர்ந்தும் இலங்கை நிலைவரம் குறித்து பாதுகாப்புச் சபையில் முழுமையான விளக்கவுரையொன்று நிகழ்த்தப்படுவதை உறுதி செய்வதற்காக நாங்கள் தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம்.

ஐ.நா.பாதுகாப்புச் சபையில் இலங்கை விவகாரம் தொடர்பாக ஜோன் ஹோம்ஸ் உரையாற்றியதை நாங்கள் வரவேற்கிறோம். பாதுகாப்புச் சபையில் உள்ள எமது சகாக்களுடன் தொடர்ச்சியாக இலங்கை நிலைவரம் குறித்து விவாதித்து வருகிறோம். அவர்களுடன் இணைந்து நிலைமையை உன்னிப்பாக அவதானித்து வருகிறோம்.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல் முக்கியமான கட்டத்தை அடைந்துள்ளது. பிரிட்டிஷ் அரசு இலங்கையின் மனிதாபிமான நிலை குறித்து ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது.

குறிப்பாக மோதலில் சிக்கியுள்ள ஆயிரக்கணக்கான மக்களின் நிலை பற்றி கவலை அடைந்துள்ளது.

அந்தப் பகுதியில் சுதந்திரமாக செய்தி வெளியிட இயலாமையால் உறுதியான புள்ளி விபரங்களைப் பெறமுடியாதுள்ளது. எனினும் ஐக்கிய நாடுகள் சபை 2ஆயிரத்து 600 பேர் கொல்லப்பட்டும், 7 ஆயிரத்து 200 பேர் காயமடைந்தும் உள்ளனர் எனவும் மதிப்பிட்டுள்ளது.

இந்தப் புள்ளி விபரங்கள் அச்சமடைய வைக்கின்றன என்றார். (எ-1)

## பாதுகாப்பற்ற சூழலில்...

செயலாளரின் பேச்சாளர் வெளியிட்டிருந்தார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் கடந்த 22ஆம் திகதி இருவார மருந்து பொருட்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன. அத்துடன் தற்போது உலக உணவுத்திட்டத்தின் கீழ் ஆயிரம் மெற்றிக் தொன் உணவுப் பொருட்களை அங்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த உணவு விநியோகம் வார இறுதியில் இடம்பெறலாம் என அவர் இதன்போது தெரிவித்தார். தமிழீழ விடுதலைப் புலிகளும் பொதுமக்களை, பாதுகாப்பு வலய பிரதேசங்களுக்கு அனுப்பாமல் தடுத்து வைத்துள்ளனர்.

இதற்கிடையில் வன்னியில் இருந்து வந்து வவுனியா இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ளவர்களை பதிவு செய்யும் நடவடிக்கைகள் எதிர்வரும் ஏப்ரல் மாத இறுதியில் நிறைவடையும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த வருடம் ஜனவரியில் இருந்து மார்ச் மாதம் 23ஆம் திகதி வரையில் 44 ஆயிரத்து 756 பேர் மோதல் பிரதேசங்களிலிருந்து வெளியேறியுள்ளனர். இவர்கள் வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்பதை அவர் அங்கு சுட்டிக்காட்டினார்.

மொத்தமாக 3 ஆயிரத்து 701 கூடாரங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதியத்தினால் அவர்களுக்கான தற்காலிக மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## புதுமாத்தளன் வைத்தியசாலை...

அவர் அவ் வேண்டுகோளினை விடுத்துள்ளார். இது தொடர்பாக பி.பி.சிக்கு அவர் தெரிவித்ததாவது;

புதுமாத்தளன் மருத்துவமனையைச் சூழ்ந்த பகுதிகளில் நேற்று பிற்பகல் 3 மணியிலிருந்து தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல்களில் 140இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளார்கள். இவர்களில் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்ட நிலையில் 20 பேர் சிகிச்சை பலனளிக்காமல் இறந்துள்ளார்கள்.

ஷெல் தாக்குதல்களில் சம்பவ இடத்திலேயே இறந்தவர்களின் உடல்கள் மருத்துவமனைக்குக் கொண்டுவரப்படவில்லை. புதுமாத்தளன் மருத்துவமனையில் நோயாளர்கள் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவரும் விடுதியின் வெளியே அருகில் நேற்று மாலை ஷெல் ஒன்று வீழ்ந்து வெடித்தது.

இதனையடுத்து அந்த விடுதியில் தங்கியிருந்த நோயாளர்கள் அவசரமாக மருத்துவமனையை விட்டு ஓடிவிட்டனர். தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்களின் காரணமாக மருத்துவமனை ஊழியர்களும் மருத்துவர்களும் பதற்றத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள்.

இதேவேளை நேற்று அதிகாலை 4.30 மணியளவில் எமது வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப்பிரிவு மற்றும் சத்திர சிகிச்சைப்பிரிவு கட்டடத் தொகுதி மீது ஷெல் வீழ்ந்ததில் தீவிரசிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த ஐந்துபேர் இறந்துள்ளார்கள். வைத்தியசாலை ஊழியர் இருவர் உட்பட 10 பேர் காயமடைந்துள்ளனர். மருந்துகள் சேதமடைந்துள்ளன.

இவற்றை சர்வதேச செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதிகள் வைத்தியசாலைக்கு வந்து பார்வையிட்டனர். வைத்தியசாலை பகுதியில் இடம்பெற்ற தொடர்ச்சியான ஷெல் தாக்குதல் நடத்தப்படுகிறது எனவே வைத்தியசாலையின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த தருமாறு அவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

வைத்தியசாலை மீது ஷெல் வீழ்ந்ததுடன் நாங்கள் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஞானசோதிக்கும் வடக்குக் கிழக்கு இணைப்பாளர் மருத்துவர் ஜெகநாதனிற்கும் தகவல் தெரிவித்துள்ளோம்.

எமது அரசாங்க அதிபரிற்கும் இது தொடர்பாக கடிதம் அனுப்பியுள்ளோம். இவர்களிடம் எமது வைத்தியசாலையின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தித் தருமாறு கேட்டுள்ளோம்.

இவ் வைத்தியசாலை பாதுகாப்புவலயத்திலேயே உள்ளது என்பதனை இருதரப்பிற்கும் ஏற்கனவே அறிவித்திருந்தோம் இதன் அமைவிடம் தொடர்பாகவும் தெரிவித்திருந்தோம் என்றும் அவர் கூறினார். (ச-14)

# மொறட்டுவ பல்கலைக்கழக போட்டிப் பரீட்சைக்குச் செல்வோருக்கு

மொறட்டுவ பல்கலைக்கழகத்தினால் 2008/2009 கல்வியாண்டிற்கான விஷேட கற்கை நெறிகளுக்கு மாணவர்களை அனுமதித்துக் கொள்வதற்காக எதிர்வரும் 4,5 ஆம் திகதிகளில் நடத்தப்படும் போட்டி பரீட்சைகளை யாழ்ப்பாணத்தில் நடத்த ஏற்பாடு செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

எனவே மேற்படி போட்டிப் பரீட்சைகளுக்கு தோற்றவுள்ள யாழ்ப்பாண மாணவர்கள் தம்முடன் தொடர்பு கொண்டு விபரங்களைக் கொடுத்தால் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் 4ஆம் 5ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள போட்டிப்பரீட்சைக்கு அழைக்கப்பட்ட மாணவர்கள் வலம்புரியிடம் தொடர்பு கொண்டு கேட்டதற்கிணங்க நாம் யாழ்.அரச அதிபரிடம் கேட்டபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாணவர்கள் கொழும்புக்குச்சென்று பரீட்சைகளை எழுதுவதற்கு ஏற்படும் சிரமங்கள் தொடர்பில் உரியவர்களுக்கு எடுத்துக் கூறி பரீட்சைகளை யாழ்ப்பாணத்தில் நடத்த ஏற்பாடு செய்ய முடியுமெனக் குறிப்பிட்ட யாழ்.அரச அதிபர் க.கணேஷ், பரீட்சார்த்திகள் தம்முடன் தொடர்பு கொள்ளும் பட்சத்தி லேயே அவற்றை செய்து கொடுக்க முடியுமெனவும் தெரிவித்தார். (ச-5)

# சிறைச்சாலை பாதுகாவலர் பதவி

## நேர்முகத் தேர்வுக்கு தோற்ற முடியாதோரை பதிவு செய்யுமாறு அரச அதிபர் அறிவிப்பு

சிறைச்சாலை பாதுகாவலர் பதவிக்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு யாழ். மாவட்டத்திலிருந்து தோற்ற முடியாதவர்கள் தமது விபரங்களை யாழ்.செயலக அரச அதிபர் பணிமனையில் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. சிறைச்சாலை பாதுகாவலர் பதவிக்கு 2008 ஆம் ஆண்டு விண்ணப்பித்தவர் களுக் கான நேர்முகப்பரீட்சை கடந்த 24 ஆம் திகதி கொழும்பு சிறைச்சாலை பயிற்சிப் பாடசாலை யில் நடைபெற்றது.

எனினும் தபால் விநியோகம் தாமதமானதால் யாழ்.மாவட்டத்திலிருந்து அழைக்கப்பட்டவர்கள் உரிய திகதியில் அங்கு செல்ல முடியவில்லை.

இது குறித்து யாழ்.அரச அதிபர் க.கணேஷின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதையடுத்து உரிய நடவடிக்கை எடுப்பதற்காக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்கள் தமது விபரங்களை யாழ்.மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் பணிமனையில் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (ச)

## வன்னி மக்களைப்...

ரம்புக்வெல தெரிவித்தார்.

நேற்று தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

பாதுகாப்பு நடவடிக்கை போன்று இன்று எல்லோராலும் பரவலாக பேசப்படுவது பொருளாதார நெருக்கடி. இது அரசியல்வாதிகளின் முக்கிய விடயமாக மாறியுள்ளது. ஓர் அரசு என்ற வகையில் மக்களை பயங்கரவாதத்திலிருந்து மீட்பது எமது கடமை.

பயங்கரவாதத்தை ஒழிக்க மக்கள் வழங்கிய ஆதரவினால்தான் நாட்டின் பயங்கரவாதச் செயல் மட்டுப்படுத்தப்பட்டது. எனவே யுத்தத்தினால் பொருளாதாரம் கீழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது எனக் கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

இலங்கையில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் எதிர்நோக்கும் பிரச்சினை இது. இதனால் அமெரிக்கா பாரிய நெருக்கடியை கடந்த மாதம் சந்தித்தது.

இவ்வாறான யுத்தத்தை நடத்திக் கொண்டு நாட்டின் பொருளாதாரம் பாதிப்புறாத வகையில் அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

# யுத்தம் நிறுத்தப்படும் வரை...

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்து கலந்துரையாட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

இது தொடர்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டினை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று கொழும்பு ஜானகி ஹோட்டலில் இடம்பெற்றது.

இதில் உரையாற்றுகையிலேயே, சம்பந்தன் எம்.பி. இதனைத் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 3 இலட்சம் பொதுமக்கள் இடம்பெயர்ந்து வாழ்கின்றனர். மோதல் இடம்பெறும் பகுதிகளில் ஷெல் தாக்குதல்களினாலும், விமானத் தாக்குதல்களினாலும் தினமும் பல பொதுமக்கள் உயிரிழக்கின்றனர். காயமடைகின்றனர். முல்லைத்தீவில் இடம்பெயர்ந்த மக்களுக்கு போதுமான உணவு இல்லை. குடிப்பதற்கு சுத்தமான நீர்இல்லை. மருந்துகள் இல்லை. இதன் காரணமாக இறப்புக்கள் கூட சம்பவிக்கின்றன.

மக்கள் இவ்வாறு பாதிக்கப்படும்போது நாட்டின் தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்து கலந்துரையாடுவது அர்த்தமற்றது. எனவே முல்லைத்தீவில் நிலவும் மனிதாபிமான நெருக்கடிகள் முடிபுக்கு கொண்டுவரப்படவேண்டும்.

அவ்வாறான சூழ்நிலையில் நாட்டின் தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்து ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவது அர்த்தமுள்ளதாகும் என சம்பந்தன் எம்.பி தெரிவித்தார்.

அரசியல் தீர்வு மூலம் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு சாதகமான அரசியல் நடவடிக்கைகள் எடுக்கப்படும் பட்சத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒத்துழைப்பு வழங்கும் எனவும் சம்பந்தன் எம்.பி தெரிவித்தார்.

### ஜனாதிபதிக்கு கடிதம்

இதேவேளை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளது. அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு வலயத்திற்கு அப்பால் மோதல்கள் இடம்பெறுவதாக இராணுவம் தெரிவிக்கின்றது.

எனினும் இவ்வலயத்தின் மீது விமானத் தாக்குதல்களும், எறிகணைத் தாக்குதல்களும் மேற்கொள்ளப்படுவதால் சராசரியாக தினமும் 40 முதல் 50 வரையான பொதுமக்கள் உயிரிழப்பதுடன் காயமடைகின்றனர்.

அப்பகுதிகளில் இருந்து சர்வதேச தொண்டு நிறுவனங்களையும் அரசாங்கம் வெளியேற்றியுள்ளதுடன், உணவு, மருந்து, தற்காலிகக் குடில்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை அனுப்புவதில் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

உண்மை நிலையை அறிவதற்கு ஊடகங்கள் அனுமதிக்கப்படுவதில்லை.

### 3 இலட்சம் மக்கள்

இப்பகுதிகளில் 3 இலட்சம் பொதுமக்கள் இருக்கின்றனர். ஐ.நா. மற்றும் சர்வதேச தொண்டு நிறுவனங்களின் கணிப்பின்படி 2 இலட்சம் மக்கள் அப்பகுதிகளில் வாழ்கின்றனர்.

அரசாங்கம் 70 ஆயிரம் பொதுமக்கள் இருப்பதாக தெரிவிக்கின்றது. எனவே அரசாங்கத்தால் அனுப்பப்படும் உணவு மற்றும் மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றமையால் பட்டினிச் சாவு ஏற்பட்டு பல சிறுவர்கள் கூட உயிரிழந்துள்ளனர்.

இவ்வருடம் ஏற்றுக்கொள்ளப்பட்ட விமான மற்றும் எறிகணைத் தாக்குதல்கள் காரணமாக 3 ஆயிரம் பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். அத்துடன் 8 ஆயிரம் பொதுமக்கள் காயமடைந்தும் உள்ளனர்.

எனவே பொதுமக்கள் வெளிப்படையாக தாக்குதல்களுக்கு இலக்காகின்றமை தெரிய வருகின்றது. இம்மக்களுக்கு போதிய உணவு மற்றும் மருந்து அனுப்பாமல் அவற்றை தமிழ் மக்களுக்கு எதிரான போராயுதமாக பயன்படுத்தப்படுகிறது. எனவே இவ் மனிதாபிமான அவலங்களை கருத்தில் கொண்டு இராணுவ நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்த வேண்டும்.

போதுமான உணவு, மருந்துப் பொருட்கள் போதுமான அளவு கிடைக்கப்பெறுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

ஐ.நா. மற்றும் ஐ.சி. ஆர்.சி உட்பட ஏனைய சர்வதேச தொண்டு நிறுவங்களை அப்பகுதிகளில் சுதந்திரமாக செயற்பட அனுமதிக்க வேண்டும் என ஜனாதிபதிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-3,5,14)

ஆங்கிலம் கற்பித்தலில் இதுவரை காலமும் இருந்த சவாலை "ANVIL" தன் பத்து வருட ஆய்வின் மூலம் வெற்றிகரமாக எதிர்கொண்டிருக்கின்றது.
நூற்றுக்கணக்கான மாணவர்கள் பங்கு கொண்ட இந்த ஆய்வின் முடிவு ஆங்கிலம் கற்பிப்பதில் ஒரு திருப்பு முனையாகும்.
உங்கள் பிள்ளைக்கு ஆறு வயதாகின்றதா? ஆங்கிலம் கற்க அதுதான் சரியான நேரம். சரியான இடம்:-
ANVIL
The seat of formal English
ARASADY AMMAN VEETHY,
THIRUNELVELY NORTH.
சனி மற்றும் வேலை நாட்களில் காலை பத்து மணிமுதல் அனுமதிகள் பெறலாம்.
(2450)

Sun Micro Systems இன் நேரடி சான்றிதழ்
Sun Certified Java Programmer
பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில்
புதிய பிரிவு ஆரம்பம் 28.03.2009 07.30AM
இவ்வருடத்தில் இப்பிரிவு மட்டுமே
கணனி துறைசார்ந்த பலரும் சர்வதேச தொழிற்சந்தைக்கேற்ப தகமைகள் பெற தவறி விடுகின்றனர். நீங்கள் உலகின் முன்னணி நிறுவனத்தின் அங்கீகாரத்தைப் பெறுங்கள்.
JAVA
MCS
Supported By UNDP/JRRP
324, பலாலி வீதி
யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.03.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.